உ

ஓம் விநாயகநம




# சந்திரதீபம்



## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது



சைவ உண்மை விளக்கும் மலர்

இதழ்: 3 சுடர்: 11

ரௌத்ரி வருஷம் சித்திரை மீ 6 ம் உ

வெள்ளிக்கிழமை [18-4-1980]



University of Jaffna Sri Lanka RECEIVED 1980 Periodic...

## நம்நாட்டில் கோவில் சொத்தை தன் சொந்த வாழ்க்கைக்கு எடுக்காத கோயில் நிர்வாகம் வேதாகம வழிநின்று கோவிலில் மகோற்சவம் - பூசை நடாத்தும் பிராமணர்கள் - குருக்கள்மார் இவர்களைக் காட்டினால் சந்திரதீபம் லட்சம் ரூபா பரிசு தரவுள்ளது

நமது சைவம் என்றால் அது கடவுள் தன்மையாவது. ஆதலின் அதனுடைய இயல்பை எடுத்துக்கொண்டால் பூ நீர் தீபம் தூபம் தோத்திரம் இவற்றால் வழிபாவதாகும். இவ்வளவும் கடவுள் தன்மை! இதனை உணர்ந்தால் நாம் இவற்றின் மூலமாகக் கடவுளைப் பெறுகின்றோம். அதாவது கடவுளை வளர்க்கின்றோம்.

ஓரிடத்து ஓர் கல்லை இது கடவுள் என்ற முழுநம்பிக்கையுடன் வையுங்கள். இருபுறமும் இரு குத்துவிளக்கை வையுங்கள். விளக்கைச் சுடர் விட்டு எரியச் செய்யுங்கள். நீங்கள் நீராடிய பின் புனிதமான ஓர் குடத்து நீரை எடுத்து [illegible] ஆகதநீரை நீங்கள் கடவுள் என நம்பிக்கையுடன் தாபித்த கல்லின்மேல் வாருங்கள். நல்ல மலரை எடுத்து அணியுங்கள். சாம்பிராணி தசாங்கம் குங்கிலியம் இப்புகையான தூபத்தை இடுங்கள். தீபத்தைக் காட்டுங்கள். தூயதாகச் சமைத்த உணவை கடவுள்முன் படையுங்கள். உங்கள் வாயால் நீங்கள் கற்ற தோத்திரங்களைச் செய்யுங்கள்; பணியுங்கள்.

இப்பூசையை நீர் புரியும்போது பகை குரோதம் வஞ்சம் ஆர்வம் ஆசை அகந்தை இவ்வளவையும் நீக்கிவிடுங்கள். நித்தலும் நீர் இதைச் செய்துவர அங்கு கடவுளை வளர்க்கிறீர்கள். உண்மையான அன்பால் பூசித்துவர அக்கல்லில் கடவுள் வளர்கிறார். அக்கல்லின் உள்ளாக நின்று உமது பூசையைக் கடவுள் ஏற்கிறார். இதுதான் எம் முன்னைப் பெரியோர் கையாண்டவழி. இதற்குமேலாக ஆகமம் சொல்லும் நற்கிரியாபாகங்களை உணர்ந்து அதன்படி விசேடமாக பால் தயிர் நெய் தேன் பழம் இவை பலவற்றாலும் அபிஷேகம் செய்யலாம். ஆதலால் அன்புநெறி அருள் நெறி என்று செல்வோம்.

இப்படியாக நாள்தோறும் பூசித்து வர ஒருநாள் உமது அன்பிற்கு அமைந்து கடவுள் தோன்றுவார். வேண்டிய வரங்களைத் தருவார். இதுவே சைவ விதி.

எங்கள் சைவம் தெய்வமாவது கடவுள் சிவனையே சைவன என பெரியோர்கள் மொழிகிறார்கள். சைவம் என்ற கொள்கையில் சித்தம் ஒன்றி சிவமதே நினைவதும் சிவமாக ஆவதும், சிவனை வளர்ப்பதுமாகும்.

சிவனது செயலாகும் சைவமார்க்கத்தில் பூ நீர் தூபம் தீபம் தோத்திரம் இவையாவும் தானே தனக்குச் செய்கிறான் என்பது துணிபு. இதனை உபநிடதமூலம் தெளியலாம். தன்னை அர்ச்சித்தான்; தானே தீபம் காட்டினான். நம் வடிவாக இருந்து தமது வடிவைத் தாம் பூசித்தான் என்று இன்னவாறு பலவும் பெரியோர் பாடலமூலம் மொழிந்தனர். இவை யாவும் சாந்தி என்னும் அடிப்படையில் நிகழ்வன.

இவைதான் புண்ணியம். புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு எனப் பெரியோர் மொழிவர். ஆனால் இன்று இப்புண்ணியச்செய்கை எங்கு நடைபெறுகிறது! எங்கு இதன் உண்மைவிளைவைக் காணலாம்.

எந்தக் கோவிலில் நடைபெறக் கண்டு மகிழலாம். எந்தக் கோயிலில் எந்த பத்திமையாக விசுவாசமாகக் காலம் தவறாது நியமம் [illegible] அரியப்படாது ஆத்திரப்படாது [illegible] செய்கிறார். ஒரு கோயிலை காட்டவல்லீராகில் ஒரு இலட்சம் ரூபா காட்டவல்லார்க்கு நாம் சன்மானம் வழங்குவோம்!

எந்தக் கோயில் நிர்வாகம் தாம் கடவுளது இருப்பிடத்தைப் பேணுகின்றோம்! ஆனதனாலே நாம் முதல் திருந்திய சைவ ஒழுக்கமுடையவராகக் கோயில் சொத்தில் தீண்டாதவராக, கோயில் சொத்தைப் பொய்க் கணக்குப்போட்டுக் களவெடாதவராக, கோவிற்காசில் சோக்குப்பண்ணாதவராக, கோயிலில் கும்பிடவருவாரை வருத்தக்கூடாது என்பவராக இருக்கிறார். அப்படி ஒரு நிர்வாகம் எங்கிருக்கிறது எனக் காட்டவல்லார்க்கு நாம் 1 லட்சம் ரூபா சன்மானம் வழங்க ஆயத்தமாகின்றோம்.

கோயில்களில் மகோற்சவம் நடைபெறுகிறது. அதாவது கொடியேற்ற விழா நடைபெறுகிறது. கொடியேற்றம் என்றால் என்ன? கொடித்தம்பம் சிவம், சீலை ஆன்மா, அதைச் சுற்றிய கயிறு பாசம்! யாமேல் பாசம். சிவன்மேல் பாசம். இதனால் மகோற்சவகாலம் சிவசம்பந்தமாவது இது நோன்பாவது! கொடியேற்றுங் குரு காப்புக்கட்டி கொடியேற்றம் நடத்துமுன் சில ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் முதற்கண் கோயில் எல்லையைத் தாண்டி அவர் அப்பால் போகக்கூடாது. தனது மனைவியுடனோ அல்லது வேறெந்தப் பெண்ணுடனோ காதகாரியம் வைத்துக்கொள்ளக்கூடாது. பிறர் சமைத்த உணவு தாம் உண்ணக்கூடாது. எதுவிதமான கேளிக்கைகள் வேடிக்கைகள் இவற்றில் ஈடுபடக்கூடாது. கோபம் பொறாமை புறங்கூறல் அயதூறுசெய்தல் நீக்கப்படவேண்டும். கொடிமரப்பூசையும் யாகபூசையும் அல்லாது வேறெந்தப் பூசையும் செய்யலாகாது. கொடிமரப்பூசை நடக்குப்போது [illegible] முழங்கும்போது கொடிமரப்பூசை செய்யக்கூடாது. யாகபூசையும் அப்படியே. அதிகாலை எழுந்து நீராடிச் சந்திசெய்யவேண்டும், இப்படியாக நடக்கும் ஒரு கோயிலையும், இப்படி ஒழுங்கான முறையில் மகோற்சவம் நடத்தும் ஒரு குருக்களையும் காட்ட வல்லார்க்கு ஒரு லட்சம் கொடுப்போம்.

## எம்பணியை பேதமை என இகழ்வார் உண்மை வழி எதுவென எமக்குக் காட்டட்டும்

எந்த ஒரு கோயிலில் மகோற்சவம் மகோற்சவத்துக்குரிய சிறப்புடன் [illegible] பெறுகிறது. எந்த ஒரு கோயி[illegible] மகோற்சவம் [illegible] பெறும் நாளில் கோவில் வீதிகளில் வியாபாரக் கடைகள் இல்லாதிருக்கின்றன. இதைக்காட்ட வல்லார்க்கு ஒரு லட்சரூபா கொடுப்போம்.

அன்பர்களே இப்பரிசில் திட்டத்தை உங்கள்முன் வெளிப்படுத்துவதன் நோக்கம் எமது சைவநெறியின் மாண்பை உங்களுக்கு எடுத்து விளக்கிக் காண்பிக்கவேயாகும்.

எங்களது சைவநெறி மனிதர்களால் வகுக்கப்பட்டதல்ல. கடவுளால் வகுக்கப்பட்டது. கடவுள் கல் ஆலமரத்தின்கீழ் இருந்து இதைத் தான் சனகாதி முனிவர்க்கு சொன்னார்.

தனது சக்தி உமையம்மையாருக்கு இந்த அறத்தையே கடவுள் விளக்குகிறார். எப்படியெனில் ஒருநாள் உமையம்மை கடவுளைக் கேட்டாள்; எம் பெருமானே! நீ நான்கு வேதம் ஆறு அங்கம் இருபத்தெட்டு ஆகமம் ஸ்மிருதிகள் உபநிடதங்கள் புராணங்கள் எல்லாவற்றையும் வகுத்தாய்: இவை எல்லாவற்றையும் திரட்டிச் சுருக்கமாக இதன்கருத்தைத் தெளிவாக விளங்கப்படுத்து என்றாள்.

அம்பாள் அவ்வண்ணம் கேட்டலும் கடவுள் என்ன சொன்னார்? அம்மையே இதன் சுருக்கமாவது யார் ஒருவர் இப்பூமியிலே சென்று என்னை பூவும் நீரும் விளக்கும் கொண்டு வழிபடுகிறாரோ? அதுவே வேதம் ஆகமம் ஸ்மிருதிகள் புராணங்கள் தெளியவைக்கும் உண்மைச் செயலாகும் என்றார்.

எனவே புறத்தே பூவும் நீரும் விளக்கும்கொண்டு வழிபடும்போது அகத்தே அன்புமயமாதல் வேண்டும் என்றும் கூறினார் கடவுள்.

அன்பு அன்பு என்று நாம் பேசுகிறோம் [illegible] படிக்கிறோம். வித்துவான்கள் [illegible] பிரசங்கிகள் இதை மேடையிகு நின்று கூடைகூடையாகப் பேச்சு மூலம் கவிட்டுக்கொட்டுவார்கள். ஆனால் அன்பு என்றால் என்ன என்றது தெரியாதே இவர் அனைவரும் பேசுவார்.

அன்பு என்று சொல்வார். அன்பு என்றால் என்ன? அது தெரியாது அன்புபற்றிப் பேசும் நீ முதல் என்ன செய்கிறாய்? அதற்குப் பதில் இங்கு பல வித்துவான்கள் அந்தணர்களிடம் இதைக் கேட்டால் அது கலியுகம்; கலியுகத்தில் இது [illegible] என்கிறார். அப்போது [illegible] எனது அறிந்து நீ ஏன் மேடையில் ஏறு வீண் தற்றல பிதற்றுகிறாய் என நாம் பலரையும் கேட்பதுண்டு. மூஞ்சையைச் சுழிச்சுக்கொண்டு பலர் சிரிப்போடு நழுவுவது உண்டு. ஆதலினால் அன்பு என்பது எப்போது தலைப்படும் என்றால் எவன் ஒருவன் உலக பந்தங்களை அறவே நீக்குகின்றானோ அவனுக்கே தலைப்படும். பந்தமே ஆசையை வருவிப்பது. பந்தம் நீங்கினால் ஆசை அகலும்; பகை அகலும்; பொறாமை அகலும்; நான் என்ற அகந்தை அகலும், எதிலும் நிதானமாக வாழலாம்.

எனவே இதுதான் அன்பின் வழி. ஆதலின உள்ளம அன்பாகி மேலாம் திருவுடைய பூ நீர் விளக்கு இவற்றால் பூசைபுரிய அன்பர் அன்பிறக்கு கட்டுப்பட்டாக கடவுள் வருவார். இதற்குமிஞ்சி வேதம் ஆகமும் எந்த நூலும் இல்லை. இவைதான் சைவதத்துவம்.

இந்த வழியையே எம் முன்னைப் பெரியோர் கையாண்டனர். திருநாவுக்கரசர் ஒரு தேவாரத்து என்ன சொல்கின்றார். 'பூவொடு நீர் சுமந்து ஏத்தி புகுவார் அவர்பின் புகுவேன் என்கின்றார்.'

இல்லறமாயினும் துறவறமாயினும் எந்த அறத்தில் ஒழுகுவார் எவராயினும் பொய்யை அறவே நீக்கி சைவ தருமம் விதித்த பூ, நீர் இவற்றின் பேற்றுடன் வாழவேண்டும்.

இதுதான் எமது ஆலயங்களின் மூலசெயல்! இது தவறி பல பல வேறு செயல்கள் இடம்பெறலால் அதை ஆலயம் என்று சொல்வார்க்கு பெரும் பழி தாமாகவரும்.

பற்று நீங்கி அன்பு வழியாக எதிலும் ஆர்வமோ கோபமோ பெருமையோ இல்லாது தினமும் கடவுளை பூசிக்கும் ஒரு அந்தணரை கற்பனை செய்யுங்கள். அவர் நிலை எப்படி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருக்கும் எண்ணிப்பாருங்கள். அவர் பிற மக்களை பிற உலகை எவ்வாறு காணுவார்? என்ன அடிப்படையில் பிற மனிதரோடு பழகுவார். இதை கற்பனை செய்யுங்கள்.

இத்தகைய அந்தணர் பூசைபுரியும் கோயில் எப்படி இருக்கும்? இன்றைய வம்பன், வஞ்சகன், குடிகாரன், கொலை காரன், காமுகன் ஆன போக்கிரிப் பிராமணன் செய்யும் பூசை எப்படியிருக்கிறது! நேரே காணுகிறீர்கள். உண்மையில் இது நீதுயோ? இந்த சண்டாளப் பிராமணி எவ்வளவு தூரம் எமது சமய நெறியைப் பழுதாக்கி விட்டான்.

கொடியேற்றும் பிராமணர் கொடியேற்றும் காலத்தில் விறண்டிப் போத்தல் வைத்திருந்த வரலாறு உண்டு. கும்பாபிஷேகத்தில் அவின் உருண்டையுடன் பால் அருந்தியவர் உண்டு. இன்றும் பல பிராமணர்கள் சாராயம் குடித்து தேர்த்திருவிழாவில் காணப்பட்டதுண்டு. இவைகள் நடந்தது உணமை என பல பிராமணர்களே என்னிடம் சொல்லியுள்ளார்கள்.

இந்தக் குடிகார சமூகத்தை ஆதரிக்கும் சில அரசாங்க சேவையில இருந்து இளைப்பாறிக் கொண்டு சைவ பரிபாலனம் செய்ய வருபவர் பலர் தாமும் மத்தியானச் சாப்பாட்டிற்கு முன் இரகசியமாக ஒரு போத்தல் கள்ளு அல்லது கொஞ்சச் சாராயம் குடியாமல சாப்பட முடியாதவர். ஐயா இந்த ஐயர் சோக்கான ஐயா. இவருக்குச் சீவனத்திற்குக் காசு போதாது என்று வாதாடுகிறார். மூர்க்கரை மூர்க்கர் உவப்பது இயல்பே!

ஆனல் ஒரு பிராமணன் உண்மை தெளிந்தவனாக ண்மை வேதநெறி விளங்கியவனாக இருப்பானே எனின் அவன் ஒருபோதும் தனது தொண்டிற்காகச் சம்பளப்பிரச்சனை எழுப்பான்.

தொண்டின் பயன் சிவன் அருள். ஆகவே இவன் சம்பளம் பேசினல் அவன் ஓர் நட்டாமுட்டியே! ஒரு பிராமணன் தன்னை நிதானமாக விளங்கிக் கொண்டால் பட்டினிகிடக்கவரினும் தனது தொண்டைக் கைவிடான். இதுதான் சைவநீதி.

இதை யார் எண்ணப்போகிறார். சிந்திக்கப்போகிறார். பெரிய புராணத்தை எடுங்கள்; வாசியுங்கள். அங்கு எங்காகிலும் ஒரு அந்தணர் செய்யும் பூசைக்கோ அல்லது மாலை கட்டும் பணிக்கோ வேறு எந்தப் பணிக்குச் சன்மானம் பெற்றார் எனக் கூறப்படுகிறது.

இந்தவகையில் நமது சமய ஒழுக்கங்கள் எல்லாக் கோயிலிலுமே சீர் கெட்டுள்ளன. இதைச்சுட்டிக்காட்ட குடிகாரக்கூட்டம் சண்டித்தனத்திற்குத் திரளுகின்றது. ஐயோ உங்கள் தீயவழியில் துணிந்த நடத்தை எமது சமயத்தைப் பிறசமயத்தவர் பார்த்து இகழும் அளவிற்கு வந்துளது. அடுத்து எமது சமயத்து இனி ஒரு மகான் தோன்றவும் வழியில்லை ஏன்?

கோயில் எல்லாம் தலைகீழாக நடந்தால் உண்மை அகன்றல் காடைத்தனமும் வஞ்சமும் பெருகினல் கடவுட்தன்மை யாரும் பெறலாமோ? இதைப் பகிரங்கமாக நிரூபிககட்டும்.

உண்மையாகச் சொல்கிறேன். பெரியகோவில் எனப் பேசப்படும் திருக்கேதீச்சர நிர்வாகத்தில் பெரும் பண மோசடிகள் நிரம்பிவழிகின்றன. கோயில் சீமெந்தில் அதன் காரியதரிசி திரு. நமசிவாயம் தமக்கு ஒரு வீடு கட்டியுள்ளாராம். அடுத்து அவருக்கு உதவியாளராகும் புலவர் என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசு என்பவர் தனதூரில் தனக்கு ஒரு சொந்தவீடு கட்டி உள்ளாராம். இது எல்லாம் கோயில்பணம் என்று பலரும் பேசுகிறார்கள், இதுவன்றித் திருக்கேதீச்சரத்தில் காரியதரிசி புலவர் இவருடன இணைந்த ஒரு கூட்டம் வன்செயலால் நட்டாமுட்டித் தனங்களால் தம் அதிகாரத்தை நிலை நாட்டி வருகின்றனர்.

உண்மையில் திருக்கேதீச்சர நிர்வாகம் எங்கள் சைவநெறிக்கு ஓர் அவமானம். நிர்வாகம் என்று உள்ளொன்றுவைத்து புறமொன்றுபேசத் தலைப்பட்டதோ அன்றே அந்த நிர்வாகம் தூ[illegible]கெட்டுப் பழுதடையும். இருந்து பாருங்கள், திருக்கேதீச்சர நிரவாகத்தில் இன்னமும் சீர்கேடு மலியுமே ஒழிய வேதநீதி ஒரு போதும் தலைப்படாது.

திருநாவுக்கரசர்பெருமான் ஓரிடத்து "பொய்யஞ்சி வாய்மைகள் பேசி புகழ்புரிந்தார்க் கருள் செய்யும் ஐயஞ்சின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே!" எனக் கூறுகின்றார். இதுமட்டுமல்லாது தமது பல தேவாரப் பதிகத்தும் பொய்யினைத் தவிரவிடுங்கள் என்பதே புத்திமதியாகிறது.

ஆகவே சமயகுரவர் என்று கூறப்படும் பெரியோர் அவர் வாய்மை மொழியை யார் கடைப்பிடிக்கிறார். இன்று பொய்பேசாது நிதானமாக நடக்கவல்ல ஒரு நிர்வாகத்தை அல்லது பிராமணனைக் காட்டுங்கள்! அப்போது நாம் நெறியுடன நடக்கிறோம் என்று எவ்வாறு சொல்லலாம். இன்று பொதுமட்டாக எல்லாக் கோவிலிலுமே நெறியல்லாத நெறிதான் நடைபெறுகின்றது. பொய்யும வஞ்சனையும் சூதுமே நிரம்பி வழிகின்றது. உணமையைத் தெளிய இன்றைய நிர்வாகங்கள விரும்புகிறார்களில்லை. இதன் காரணம் பதவி மோகமும் அடுத்து கோயில்சொத்தை சூறையாடித் தான் சோக்பண்ணும் எண்ணம்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவர் சிற்றின்ப விளைவுகளில் பொழுதுபோக்க அவர் பலவீனங்கண்டு ஒரு குருக்கள் அவர்மூலமாகத் தான பணம் சேகரித்திட முயன்றார். இச்செய்தி பலருக்கும தெரியும். ஆனல் இதை என்னென்று சொல்வது. பேசிட எல்லார்க்கும் பயம்! இந்தநிலையில் கோவில் பூசைகள் திருப்பணி வேலைகள் சோர்வடைந்து குன்றுதல் இயல்பே!

சிலர் கோவில் நிர்வாகத்தில் நடைபெறும் சீர்கேடுகளைக் கண்டாலும் அல்லது பிராமணருடைய வஞ்சனையைத் துர்நடத்தையைக் கண்டாலும் அவைபற்றிப் பேசப் பயந்து நமக்கேன் இந்தச் சோலி; குற்றஞ்செய்வாரைக் கடவுள் கேட்டுத் தண்டிக்கட்டும் என அதைப்பற்றிப் பேசாதிருக்கிறார்கள்.

ஆனல் கடவுள் இவர்செயலைக்கண்டு தண்டிக்கப்போவதில்லை. அது விருப்பு வெறுப்பற்ற உண்மைப்பொருள். அதை உண்மையிலார் அடையமாட்டார். ஆதலினலே எம்பெருமானுடைய ஆலயங்கள் தவறுன நடத்தைகள் நிலவும்போது அதைச் சுட்டிக்காட்டி கோவில் நிர்வாகத்தைச் சீர்திருத்திவிடுவது ஓர் கோவில் கும்பாபிஷேகம் செயவதற்குரிய பலனகும்.

நமது சந்திரதீபப் பணியைப் பல வஞ்சகர்கூட்டம் இகழ்ந்துபேசுகிறார். அது ஒரு பேப்பரோ? அது விழல் பத்திரிகை. இப்படி யார் பேசுகிறார்களென்றல் குடிகாரப் பிராமணர்களுடன் சேர்ந்து கும்மாளம்போடும் குடிகார நிர்வாகமுமே. இப்படி அவர் இகழ்வது நாம் கூறிய குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கமுடியாத காரணத்தால்தான்.

இன்றிருக்கின்றபதட்ட நிலை நாயன்மார்காலத்து இருக்கவில்லை. அன்று புனிதநிலையும் உண்மைத் தொண்டர்களும இருந்தார்கள். உண்மைத் தொண்டர்கள் கபடமற்ற நிலையில் வஞ்சனை பொறாமை என்பன களைந்து உண்மைநிலையிலேயே பல கோவில்களிலும் நிர்வாகத்தை இயக்கிவந்தார்கள். இவர்களுடைய பணியைத் தொண்டை நாயன்மார்கள் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

கீழே தரப்படும் தேவாரத்து எம்பிரான் சுந்தரர் திருவாலங்காட்டு ஈசனைப் பாடிடும்போதுதான் திருவாலங்காட்டு ஈசனின் அடியார்க்கு அடியவனுவேன் என அவாப்படுகின்றார். இதன் தாற்பரியத்தைத் தயவுசெய்து சிந்தியுங்கள். சுந்தரர்பெருமான் திருவாலங்காட்டு ஈசனையும் அவர் அடியாரையும் எவ்வண்ணமாகக் காண்கிறார். அந்த அடியார்கள் எப்படி இருந்திருப்பார்? கோவில் எப்படி நடந்திருக்கும்? எல்லாவற்றையும் நீளநினைந்து இன்றைய நிலையில்தான் இருந்திருக்குமோ என்பதை எண்ணிப்பாருங்கள்.

திருச்சிற்றம்பலம்
திருவாலங்காடு
பண் — பழம்பஞ்சுரம்

## முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையா ளுமைபங்கா
## சித்தா சித்தித் திறங்காட்டும் சிவனே தேவர் சிங்கமே
## பத்தா பத்தர் பலர் போற்றும் பரமா பழைய னூர்மேய
## அத்தா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.

அநாதியே மலம் நீங்கிய முத்தனே! உம்மை வணங்குவார்க்கு உம்போன்ற முத்திநிலையைத் தரவல்ல முகிழ்த்த மெல்லிய முலை உடைய உமை அம்மையார் பாகனே! சித்தாகியவனே! சித்திகளின் திறத்தைக் காட்டுபவனே! சிவனே! தேவர்களுக்கு ஒரு சிங்கமே! பத்தியாயவனே! பக்தர்கள் பலரும் போற்றும் பழையனூரில் மேவிய என் அப்பனே! திருவாலங்காட்டில் இருக்கும் ஈசனே! உனக்குத் தொண்டுசெய்யும் அடியார் அனைவருக்கும் நான் அடியவன் ஆவேன்.

## பழையனூர் வரலாறு

பழையனூர் என்பது திருவாலங்காடு என்னும் தலம் இருக்கும் ஊரின் பெயராகும். பழையனூரில் திருவாலங்காடு என வந்ததின் காரணம பழையனூரில் இது ஓர் சுடலையாகியது. இங்கு இது ஏனைய சுடலையைப் போலல்லாது தனித்த ஒரு பெருமை உடையது. எப்படிஎனில் இந்தப் பழையனூரில் எழுபது சொல்தவறுத வேளாளர் வாழ்ந்துவந்தனர். இவர்கள் எழுபதுபேரும் மாலை வேளைகளில்கூடி அவ்வூரில் நிகழும் சண்டை சச்சரவு கொடுக்கல் வாங்கல் பிணக்கு குடும்பச் சச்சரவுகளை விசாரித்து நீதி வழங்குபவர்கள்.

இப்படி இவர் ஒழுகும் காலத்தில் ஒருமுறை ஓர் விசித்திரமான வழக்கை விசாரிக்கவேண்டி வந்தது. அது யாதெனில பழையனூருக்கு அருகாமையில் ஓர் ஊரில ஓர் வணிகன் இருநதான். அவனுக்கு மனைவி உண்டு. ஆனல் அவன் ஒரு சோரக்காதலியிடம் போக்குவரவு வைத்தான. இதை அறிநத மனைவி அவனைக கண்டித்தாள். அதனை அறிநத சோரக்காதலியும் கணவனுமாக மனைவியைக் கொலைசெய்ய எத்தனித்தனா. அவரது திட்டத்தன்படி அடுத்த ஊரில இருக்கும் ஓர் நண்பன் வீட்டிற்கு மனைவியை அழைத்துச் செல்வதாக மனைவியை அழைத்துவந்து இந்தப் பழையனூருக்கு அருகாமையில உள்ள ஒரு காட்டில் மறைத்துவைத்துக் கழுத்தைத் திருகிக் கொன்றான்.

புண்ணிய எல்லைக்குள்வைத்து அப்பெண்ணைக் கொன்றபடியால் அப்பெண் உடன் ஓர் பேயானது. பேயாகி மனிதப் பெணபோல் உருவெடுத்துத் தனது ஆற்றலால் ஓர் கள்ளித்தலையையும் பிள்ளைபோல் உருவமைத்து அதனையும் தூக்கிக் கொண்டு கணவனைப் பழிவாங்கும் நோக்குடன் பின் தொடர்ந்தது. பின் தொடர்வதைக் கண்ட கணவன் அச்சத்தால் ஓர் மந்திரவாதியிடம் சென்று உள்ளதைச் சொன்னுன். மந்திரவாதி அதைக்கேட்டு மந்திரம் உருச்செய்யப்பட்ட வாள் ஒன்றினைக் கணவன் கையில்கொடுத்து இந்த வாளை நீ வைத்திருக்கும் வரையும் அப்பேய் உன்னைத் தீண்டமாட்டாது எனக்கூறி வணிகனைப் போக விட்டான். தனது கணவனிடம் கைவாள் இருப்பதால் தன்னல் அவனை ஒன்றும் செய்ய முடியாதென்பதைப் பேய் உணர்ந்தது. உடனே அப்பேய் பெண்வடிவாகி இந்த எழுபது வேளாளரும் சபைகூடும் இடத்திற்குச் சென்றது. இரவுவேளை அங்குசென்று அவர்களிடம் தன் வரலாற்றைப் பேய் முறையிட்டது.

பேய் சொன்னது; ஐயன்மீர்! எனது கணவன் தனது சோரககாதலிபடம் கொணட அன்பால் என்னை வெறுத்து நீக்கிவிட்டான். நான் அவனிடம் சென்றுல் என்னைக் கொல்வதாகச் சொல்லி ஓர் வாளைக் காட்டுகிறான். ஐயன்மீர்! எனககு இவ்வீட்டில் வேறு எவரும் ஆதரவில்லை. ஆண்மையால் என் கணவனிடம் உள்ள வாளை வாங்கி என்னை அவனுடன் உறவாக்கிவிடுங்கள் என்றது.

பேயைப் பெண் எனவே எழுபது வேளாளரும் நம்பினர். அப்போது அவர்கள் வணிகனை அழைத்து விசாரித்தனர். வணிகனே உன் சோரநாயகிக்காகத் திருமணம்செய்த பெண்ணைக் கைவிடலாமா? அவளைத் துன்புறுத்தாது அவளிடம் ஒற்றுமையாக இரு. அந்த வாளை எங்களிடம் கொடு என்றனர்.

வணிகன் சொன்னுன். இது பெண் அல்ல. இது ஒரு பேய்: என்னைப் பழிவாங்கும் நோக்குடன் என்னைக் கொல்லத் திரிகிறது. அதனிடம் பாதுகாப்பாக இருக்கவே இந்தவாளை ஓர் மந்திரவாதி கொடுத்தான் எனக் கூறினுன்.

பேய் உடன் அவர்களை நோக்கி நான் பேய் அல்ல பெண். இவன் தனது கெட்ட நடத்தையால் என்னைப்பேய்போல் ஆக்கிவிட்டான். ஆன தன்மையாலே இவனுடன் நான் வாழ்வதன்றி வேறுவகையில்லை. எனவே இவனது வாளை வாங்குங்கள். அடுத்து இவன எனது கணவன் என்பதற்குச் சான்றாக எனது இடுப்பில் ஒரு பிள்ளை உண்டு எனக்கூறித் தான்வைத்திருந்த கள்ளித் தலைப்பிள்ளையை இறக்கிக் கீழேவிட்டது.

அப்பிள்ளை பேயின் ஆற்றலால் கணவனைநோக்கி 'அப்பா' எனக் கூறியது. இது கண்டதும் வேளாளர்கள் எழுபதுபேரும் பேயின் முறைப்பாட்டை நம்பினார்கள். எனினும் தம் மனதில் திடமான ஒரு தீர்ப்பை வழங்கமுடியாமையால் வணிகனை நோக்கி,

வணிகரே உமது முகத்தை நோக்குமிடத்து நீர் ஏதோ கொலைப்பழிக்கு உடந்தையானீர்போலத் தெனபடுகிறது. ஆனதினல் வாளை நீர் வைத்திருப்பதை இப்பெண் விரும்பாத அளவில் அதை எம்மிடம் கொடும். நாம அதை வைத்திருந்து பின் உம்மிடம் தருவோம். இப்பொழுது இப்பெண்ணுடன் இன்றிரவு சென்று நாளை வாரும். நாம் எல்லோரும் இதற்கு ஒரு தக்க முடிவு காண்போம் என்றனர்.

வேளாளர் இவைகூற வணிகன் சொல்வான் ஐயன்மீர் எனது சொல்லைக்கேளாது வாளைத்தருபடி வற்புறுத்துகின்றீர். ஆனல் அப்படியே நான் வாளைத் தருகிறேன். தநத நேரத்தில் இப்பேயால் நமக்கு தீங்கு நேர்ந்தால் அதற்குப் பரிகாரம் என்ன? எனக்கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கேட்டதும் வேளாளர் எழுபது பேரும் வணிகனை நோக்கி அப்படியாக எம் சொற்படி நீ வாளை எமிடத்து தந்த நோத்தில் அதன் பொருட்டாக உனக்கு ஏதும் தீங்கு நேரில் நாம் எழுபது பேரும் எமது உயிரை உடன் போக்கிக் கொள்வோம் என்றனர்.

இதைக் கேட்டதும் வணிகன் சரி அப்படியாயின் நான் வாளைத்தருகிறேன் எனக்கூறி வளை அவரிடம் கொடுத்துவிட்டு வணிகன் தனது இருப்பிடத்தை பேய் பின்தொடரச் சென்று சேர்ந்தான். அந்த இரவே பேய் அவனைக் கொலை செய்துவிட்டுத் தன் பழியை நீக்கிக்கொண்டு அகன்றது.

இதை விடிந்ததும் எழுபது வேளாளரும் கேள்விப்பட்டனர். தம் செயலால் வந்ததே எனப் பெரிதும் அஞ்சினர், வணிகனுக்குத் தாம்சொன்ன சொல்லை எண்ணினர். அவனுக்குக் கொடுத்த வாக்கே தமது உயிரினும் மேலானது என எண்ணி இந்த எழுபது பேரும் நெருப்பு உண்டாக்கி அந்த நெருப்பில தாம் வீழ்ந்து இறந்தனர். அவர்கள் எரிந்த இடமே சுடலை. இதுவே திருவாலங்காடு. இதனால் இந்தப் பழையனூரின் பெருமை என்றும் பேசப்படுவது. இதனைத் திருஞானசம்பந்தப்பெருமான் தமது தேவாரத்தில் "வஞ்சப்படுத்து ஒருத்தி வாழ்நாள் கொள்ளும்வகை கேட்டு அஞ்சும் பழையனூர்" எனப் போற்றுகிறார்.

இப்பழையனூர்ச் செய்தியைச் சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் கூறிடும்போது இச்சிறப்பைத் தொண்டைநாட்டிற்குரிய சிறப்பாகப் பேசுகிறார். சொல்லையே காக்கப்பெற்ற தொண்டை நன்நாடு என்கின்றார். இதன் அருமைபெருமையை எமது சைவமக்கள் உணர்வாரோ!

**பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் றன்னைப் போகாமே**
**மெய்யே வந்திங் கெனைஆண்ட மெய்யா மெய்யர்-**
**மெய்ப்பொருளே**
**பையா டரவம் அரைக்கசைத்த பரமா பழைய னூர்மேய**
**ஐயாஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.**

என் வாழ்வில் பொய்யினையே செயலாகச் செய்து புறத்து வேடங்களாலும் இன்பங்களாலும் அலைந்து திரிவேனை அந்தவழியில் போகாது உண்மையாக வந்து இங்கு எனை ஆண்ட உண்மைப் பொருளானவனே! நச்சுப்பை உடைய படம் எடுத்து ஆடும் நாகபாம்பை அரையில் கச்சையாக அணிந்த பரமனே! பழையனூரில் இருந்தருளும என்ஐயாவே திருவாலங்காடவனே! உன்அடியவர்க்கு நான் அடியவன் ஆவேன்.

வாழ்வு பொய்மையே பெருக்கும் படியாக அமைவது. உலக வாழ்வில் சிக்குப்பட்டார் அனைவரும் இந்நிலையில் ஆவார். ஆனதினால் பொய்மை பெருக்குவோர் உண்மை நிலைக்கு வரமாட்டார். அடுத்த வாழ்க்கை என்பது புற இன்பங்களில் அலைவதேயாகும். காணி, பூமி, மடந்தையர், வீடு கார், வானொலி, விஞ்ஞானக் கருவிகள் இத்தனையிலும் இன்பம் காணுதலால் புறம்புறமே திரிதல் எனப்பட்டது. இந்த நிலையில் இருப்பார் அனைவரும் பொய்யே பேச வேண்டும். பொய்யே பிரதான அம்சமாகக் கொள்ள இந்த நிலை ஆளாக்கி விடும். ஆனதினால் பொய்மை எனப்பட்டது. இந்த நிலையில் வாழ்வு தொடரும் போது இந்த வழியில் மனம் இழுபட்டுப்போகாது மறுபக்கம் திரும்ப வேண்டும். ஆனால் எல்லோரும் போகும் இந்த புற இன்பத்தில் தான் போகாது தடுத்தாட் கொண்டமை பேசுகிறார்.

தடுத்தாட்கொண்டது என்பது அதுவேயாகும்! அது மனித ரூபத்தில் வந்து தான் ஆட்கொண்டபடியால உண்மையை உணர்த்த வந்தபடியால் "மெய்யே வந்து இங்கு எனையாண்ட மெய்யா மெய்யர் மெய்ப் பொருளே" என்றார். மெய்யர் என்றது உண்மை நின்ற பெருநிலைக் குறியாளரைக் குறிப்பதாகும். கடவுள் மெய்யர் தம் மெய்யர் பொய்யர் தம் பொய்யர் இதை விளங்கிக் கொள்ளல் நலம்.

**தூண்டா விளக்கின் நற்சோதி தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய்**
**பூண்டாய் எலும்பைப்புர மூன்றும் பொடியாச் செற்ற-**
**புண்ணியனே**
**பாண்டாழ் வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய**
**ஆண்டாஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.**

தூண்டாது இயல்பில் தானாக சுடர் விட்டு எரியும் விளக்கினை ஒத்து உள்ளே சுடர் விட்டு எரியும் நல்ல சோதியே! உன்னைத் தொழுவார் தங்கள் துயர் தீர்த்தருள்வாய். எலும்பை ஆபரணமாகப் பூண்டாய். முப்புரங்களையும் பொடியாகும் படி செய்து வைத்த புண்ணியனே! பண்டு நாம் செய்த வினைகள் எம்மில் ஆழப்பதிந்து நிற்பனவற்றை நீக்கும் பரமனே! பழையனூரில் இருந்தருளும ஆண்டவனே! திருவாலங்காடனே! உன் அடியார்க்கு நான் அடியேன் ஆவேன்.

சிவம் தானாகச்சுடர் விட்டுள்ளது. தூண்டா விளக்கில் சுடரா விளக்குத்திரியின் மேல் இருந்து கீழ் வரும் எண்ணை வரும் துணையும் எவருமே திரி தூண்டாதபடி எரிவது போன்று கடவுளும் உள்ளத்து சோதியாக உள்ளார். அது நல்ல சோதியாவது! அவரைத் தொழுவார் அனைவரது துயரும் தீர்க்கப்படும் என்றதால் தொழுவார் தங்களுடைய துயர் தீர்ப்பாய் என்றனர் என்பதை விளங்கிக்கொள்க.

**மறிநேர் ஒண்கண் மடநல்லார் வலையிற் பட்டு மதிமயங்கி**
**அறிவே அழிந்தேன் ஐயாநான் மையார் கண்டமுடையானே**
**பறியா வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய**
**அறிவே ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.**

பெண் மானைப் போன்ற அழகிய கண் உடைய பெண்கள் நல்லாரின் பாச வலையிற் சிக்குப்பட்டு மதிமயங்கி என் அறிவெலாம் அழிந்தேன். என் ஐயா நான் அத்தன்மையால் கெட்டுப் போனேன. கருமை நிறமான மைபோன்ற கண்டம் உடையவனே என்னால் பறித்தெடுக்க முடியாத வினைகள் அவை தீர்க்கின்ற பரமனே பழையனூரில் இருக்கின்ற அறிவே திருவாலங்காடனே உன் அடியார்க்கு அடியேன் ஆவேன்.

திருவாலங்காட்டில் கடவுளைக் கண்டதும் அறிவு தலைப்படுகிறது எம்பிரான் சுந்தரர்க்கு. அந்த அறிவு பதிகமாக மலர்கிறது. இப்பதிகம் பாடும் தனக்கு மட்டுமல்லாது பாடுகின்ற அனைவர்க்கும் உண்மையைத் தெரிவிப்பதாக வருகிறது. எடுத்த நிலையில் அறிவு மயங்குவதற்கு காரணம் தெரிவிக்கின்றார். மண் பெண் பொன் என்ற மூன்றுவகை ஆசைகளும் மனிதரை சின்னாபின்னப் படுத்துவன. இந்த மூன்று ஆசைகளை உடையவர் எவரும் பெருமனிதராக முடியமாட்டார். மூவகைஆசைகளில் மிகப் பொல்லாதது பெண்கள்மேல் ஆசை கொள்ளுதல். இது முன் பிறவிகளில் செய்த பழிகள் பாவங்களால் பெண் இச்சை அறிவையும் தாண்டி எழும்.

அது மட்டுமன்றி எவரும் இந்த இச்சையால் தலை தூக்கிட இயலாதபடி பெண்களின் தொடர்பு தன்பாட்டால் வந்து சேர்ந்திருக்கும் ஆதலினால் மடந்தை நல்லார் வலையில் சிக்கி அறிவே அழிந்தேன் என்றார். இது இப்பாடலை ஓதுவார்க்கும் திருத்தமுற்ற சிந்தையை பெறும்படியாக உளது அடுத்து நாம் செய்த வினைகளை நாம் அறுக்க முடியாது. சிவனே தீர்ப்பான் என்கின்றார்.

**வேலங்காடு தடங்கண்ணார் வலையுட் பட்டுன் நெறிமறந்து**
**மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே மரகதமே**
**பாலங்காடி நெய்யாடி படர்புன் சடையாய் பழையனூர்**
**ஆலங்காடா உன்னுடைய அடியார்க்கு அடியேன் ஆவேனே.**

# போச்சேடா உன் வேதாந்தம்

## என்றார் யோகசுவாமி

ஒரு நாள் வேதாந்த மடத்தைச் சேர்ந்த திரு. வடிவேற்சுவாமிகள் சுன்னாகம் மரக்கறிச் சந்தைக்கு மரக்கறி வாங்குவதற்கு சென்றிருந்தார். சுன்னாகம் சந்தையில் பெண்கள் மரக்கறிகளை நிலத்தில் பரவி வைத்தே விற்பனை செய்வது வழக்கம். ஆனதன்மையால் மரக்கறி வாங்கப் போகிறவர் யாவரும் குனிந்து நின்று மரக்கறியைத் தொட்டெடுத்து அதற்குரிய விலையைப் பேசவேண்டும்.

இந்தநிலையில் வடிவேற்சாமி மரக்கறிவியாபாரம்செய்யும் பெண்ணொருத்தி முன்பாக விற்பனைக்குரிய மரக்கறிகளை குனிந்து நின்று எடுத்து அவற்றின் விலையை விற்பனை செய்யும் பெண்ணிடம் கேட்டபடி நின்றார். இந்த நிலையில் வடிவேற்சாமி குனிந்தபடி நிற்கவேண்டியிருந்தது.

இப்படி வடிவேற்சுவாமி நிற்க அதேநேரத்தில் யோகசுவாமி சுன்னாகச் சந்தைக்குத் தாமும் சென்றது. சென்றசுவாமி வடிவேற்சுவாமி குனிந்தபடி மரக்கறி விலைகேட்டு நிற்பதைக் கண்டார்; கண்டதும் உடன் வந்தவரை நிற்பாட்டிவிட்டுத் தாம் மெதுவாக வடிவேற்சுவாமியின் பின்னால் சென்று அவர் முதுகில தமது கையால் தட்டினார்.

வடிவேற்சுவாமி குனிந்தபடி நின்றவர் யார் அது எனக் கேட்டுக்கொண்டு நிமிர்ந்து முதுகில் தட்டினரைப் பார்த்தார். வேறொருவரையும் காணவில்லை. யோகசுவாமி நிற்பதைக் கண்டதும் திகைத்து வணக்கம் செய்தார். அப்போது யோகசுவாமி வடிவேற்சுவாமியை நோக்கி போச்சேடா உன் வேதாந்தம். உன்னில் அன்னியமாக ஒன்றொருவரைக் காண்கின்றாயே! இதுதானா உன் வேதாந்தம் எனக்கேட்டாராம.

இதைக்கேட்ட வடிவேற் சுவாமி ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் சிரித்தபடி நின்றாராம். இந்த வரலாற்றை உடன் கூட நின்று கண்டு கொண்ட ஓர் அன்பர் என்னிடம் தெரிவித்துக் கொண்டார்.

வேதாந்தம் என்பது எமது நாட்டில் வாய் அளவில் நிற்கின்றதே ஒழிய செயல் அளவில் இல்லவே இல்லை. நமது நாட்டில் எத்தனையோ சுவாமிகள் அவரைப் பின்பற்றுவோர்கள் என இருக்கிறார்கள். இவர்கள் செயல் நடத்தை அத்தனையும் தூயதில்லாதே இருக்கின்றது. வேதாந்தம் என பேசுவோர் அனைவரும் ஆணவத்தடிப்பில் அசையமாட்டாதவராக நிற்கின்றனர்.

உண்மையான வேதாந்தி பிரமமே இவர் அல்லவர் இவர் என்ற இருமைகாண மாட்டார்கள். சுருங்கச் சொன்னால் இவர்வாழ்வு ஓர் பைத்தியகாரரைப்போலவே இருக்கும். எதிலும் ஓர் அவா கோபம் குரோதம் இல்லாதவராகவே இருப்பார். தம்மையே எண்ணாத பெரும் நிலை பூண்டவர். யார் ஒருவர் இப்படி வேதாந்தியாக இருக்கிறார்? காட்டமுடியுமோ?

# சிவகடாட்சத்தின்முன் இருக்கிறாய் பின்ஏன்கவலைப்படுகிறாய்

சிவகடாட்சத்தின் முன் இருக்கின்றாய் பிறகேன் கவலைபபடுகிறாய்! இவ்வாறு யோகசுவாமி தம்மிடம் ஒருநாள் கேட்டதாக இலங்கை சிவில் சேவையிலிருந்து இளைப்பாறியவரும் கந்தர்மடவாசியுமான திரு பகவதாஸ் என்னிடம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது நான் அரசாங்க லிகிதர் சேவையில் சேர்ந்ததில் இருந்து என் கடமையில் ஒரு நாளும் தவறியதில்லை. இதனாலே என்மீது பகை கொண்டோரும் என்னிடம் என்றுமே நல்ல மதிப்பு வைத்திருந்தார்கள். என் கடமையிலே எள்ளளவேனும் எவரிடமும் பகமை பாராட்டுவதில்லை. இனததுவேசம உள்ளவர்கள்கூட என்னைப்பற்றி பேச்சுவரும் போது நான் ஒரு திறமையான நிர்வாகி கடமையுணர்வுள்ளவர் என்று பேசிக்கொள்வார்கள். அதனால் லிகிதர் சேவையின் மிக உயர்ந்த பதவிக்கு உயர்த்தப்பட்டு சேவை புரிந்தேன். பின் நிர்வாக சேவைக்கு உயர்த்தப்பட்டு அதில் பலபதவிகளை வகித்தேன். இப்படி இருக்கும் போது என்னிலும் பார்க்க குறைந்த சேவையில் உள்ளவர்கள் இலங்கை சிவில்சேவைக்கு உயர்த்தப்பட்டமைகண்டு மன வேதனைப்பட்டேன். என்னுடன் முப்பது பேர் பங்குபற்றிய நேர்முகப் பரீட்சையில் நான் மட்டுமே தெரிவு செய்யப்படவில்லை. எனது கடமையை ஒழுங்காகச் செயதும் நேர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அழகிய வேல் போலும் கூர்மையும் விசாலமும் கொண்ட கண்ணுடைய பெண்கள் பாசவலையிற் பட்டு அதனாலே உனது நெறியினை மறந்து மால் கொண்டு அனுராகம் ஆடி உலைந்து உன்னை அறவே மறந்தொழிந்தேன். என்மணியே முத்தே மரகதமே பசுவின் பாலை அபிடேகமாக ஆடுபவனே நெய்யை அபிடேகமாக ஆடுபவனே படர்ந்த புரியின் சடை ஆர்ந்து விளங்குபவனே பழையனூரில் இருக்கும் திருவாலங்காட்டு ஈசனே உன்னுடைய அடியேர்க்கு அடியேன் ஆவேன்.

பெண்கள் பாசவலையிற் பட்டு உழலுகின்ற எவராலும் சிவனருளைப் பெறமுடியாது. அல்லது சிவனருளைப் பெறுதற்குரிய சீலத்தையும் பெறமாட்டார். பெண்கள் மயக்கிலே சிக்கி பிள்ளைகள் பெற்ற நேரத்தில் பின்னர் பின்னர் பேரப்பிள்ளை பூட்டப் பிள்ளை என்று இப்படி இப்படிப் பலபல பிள்ளைகள் கலியாணம் இந்தவகை நிலமை வருமேயன்றி ஒரு நிலையில் இந்த பாசவலை பொல்லாதது என்று நிறுத்த முடியாது. அடுத்து இந்த சிக்கலிலே சிக்கி காசும் கூடக் குறைய வந்துவிட்டால் பிறகு விலக்க முடியாது. ஒரு மனிதனைப் பழுதாக்க ஒரு கார் காணும்.

ஆதலினால் இந்தப் பாசவேரை அறுத்திட்டால் அன்றி சிவநெறியைச் சிந்திக்கவையாது. சிவநெறியாவது மண பெண் பொன் என்ற மூன்றையும் நீக்கலாகும். ஆனதினால் உன் நெறிமறந்து மாலங்காடி மறந்து ஒழிந்தேன் என்கிறார்.

**எண்ணார் தங்கள் எயில்எய்த எந்தாய் எந்தை பெருமானே**
**கண்ணாய் உலகங் காக்கின்ற கருத்தாய் திருத்த லாகாதாய்**
**பண்ணார் இசைகளவை கொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்**
**அண்ணாஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.**

உன்னை எண்ணாதவரான முப்புரத்து அசுரராது அப்புரங்கள் மூன்றினையும் அம்பால் எய்து அழித்த எந்தை பெருமானே என்தந்தைக்கும் பெருமானே இந்த உலகை கண்ணும் கருத்துமாக இருந்து காக்கின்ற கருத்து உடையவனே! திருத்த வேண்டாதவனே! பண்ணின்சிறந்த இசை பலவற்றையும் கொண்டு பலரும் போற்றி செய்யும் பழையனூரில் இருந்தருளும் என் கடவுளே! திருவாலங்காட்டானே! உனது அடியார்க்கு அடியவன் ஆவேன்.

முப்புரத்து வாழ்ந்த அசுரர் முப்புரத்தின் வலியால் பலரையும் எண்ணாது துன்புறுத்தியவர். அவர் துன்புறுத்தற்கு காரணமாக இருந்தது முப்புரம். ஆதலின் அவரைத் துயரப்படுத்த வசதி செய்து கொடுத்த முப்புரமும் எய்து அழிக்கப் பெற்றது.

முப்புரமென்பது மும்மல காரியம் என திருமூலதேவன் மொழிகின்றார். மும்மலங்களும் மனிதனிடத்து வில்லங்கங்களைப் பெருக்கி அவனைக் கொடியவனாக்குவன. ஆகவே மும்மலங்கள் எரித்ததை முப்புரம் மதில்எயது அழித்தாய் என்கிறார்.

மும்மலங்களும் பெருகி இருக்கும்போது எவரும் கடவுளைச் சிந்திக்கார். அப்படியானவர் கொடுமைகள் பெருகும்போது கண்ணும் கருத்துமாக இருந்து கடவுள் கொடுமைகளை நீக்குவார். இது கருணையின் சிறப்பு! ஆதலின் கண்ணாய் உலகம் காக்கின்ற கருத்தாய் என்று கூறிவிட்டு இறைவன் இயல்பில் தீதிலாதவன் என்பதைக் குறிக்கத் திருத்தலாகாதாய் என்கின்றார். தீதலாத நன்மையைத் திருத்தவேண்டியதில்லையே. தீதில்லாத நன்மையே உலகினைக் காக்கும். ஏனைய கொடுமை எல்லாம் அழிவுசெய்யும். இதனை நம் சைவமக்கள் சித்தத்திற்கொண்டு தெளிக. 6

**வண்டார் குழலி உமைநங்கை பங்கா கங்கை மணவாளா**
**விண்டார் புரங்கள் எரிசெய்த விடையாய் வேதநெறியானே**
**பண்டாழ் வினைகள் பலதீர்க்கும் பரமா பழைய னூர்மேய**
**அண்டா ஆலங்காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.**

வண்டுகள் மொய்க்கும் கூந்தல் உடைய உமையம்மையார் பாகனே! கங்கையின் நாயகனே! வானில் தோன்றி வருத்தும் முப்புரங்களையும் எரித்தவனே! இடபவாகனம் உடையவனே. வேதநெறிக்குரியவனே. முன்னம் எம்மில் ஆழப்பதிந்த வினைகள் பலவற்றையும் தீர்த்தருளும் பரமனே. பழையனூர் இருந்த அண்டங்கட்கு நாயகனே! திருவாலங்காடா உன்அடியார்க்கு நான் அடியவன் ஆவேன்.

முன்னம் மூன்றாவது பாடலிலும் முன்னர் பெருகிப வினைகளைத் தீர்த்தருளும் சிறப்பை மொழிகிறார். இப்பாடலிலும் வலியுறுத்துகின்றார். தீராத வினைகள் தீர்ந்தொழிந்தால் அன்றித் திருவருட் பேற்றிற்கு எவரும் ஆளாகார் என்பது குறிப்பால் இப்பாடலிலும் அவை வலியுறுத்தப் பட்டது. 7

**பேழ்வா யரவி னணையானும் பெரிய மலர்மே லுறைவானும்**
**தாழா துன்றன் சரண்பணியத் தழலாய் நின்ற தத்துவனே**
**பாழாம் வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்தன்னை**
**ஆள்வாய் ஆலங்காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.**

அகன்ற வாயுடைய அனந்தன் என்னும் பாம்பினைச் சயனிப்பதற்கு அணையாகக்கொண்ட நாராயணக்கடவுளும் பெரிய தாமரைமலர்மேல் உறைகின்ற பிரமதேவனும் தாழ்விலாது உந்தன் திருவடிகளைப் பணிந்திட நெருப்பின் தணற்பிழம்பாய் நின்ற தத்துவனே! எம்மை மேல்போகவிடாது பாழாக்குகின்ற வினைகள் அவற்றினைத் தீர்த்தருளும் கடவுளே! திருப்பழையனூர் என்னும் பதியினை ஆள்கின்றவனே! திருவாலங்காட்டு ஈசனே உன் அடியார்க்கு நான் அடியவன் ஆவேன்.

படைக்கின்ற காக்கின்ற நாராயணனும் பிரமனும் தாமே உயர்வென்ற தத்துவத்தை நிலைநாட்டச் சண்டையிட்டனர். தான்தான் தலைவரெனச் சண்டையிட்டார்க்கு முடிவுகாண்பரிய சுவாமியாய் அதற்கு அப்பாலாய் ஒரு தணற்பிழம்பு தோன்றியது. தான் என்ற தன்மைகடந்து அத்தணற் பிழம்பு தோன்றலும் அவர்கள் இருவரும் தமக்கெல்லாம் தலைவன் ஒருவன் உளனெனக் கண்டு கொண்டனர். அத்தணற் பிழம்பு எல்லார்க்கும் பொதுவாக நின்றது. இருவரையும் தன்னுள் அடக்கி அத்தணற் பிழம்பு நின்றமையால் தாளாது உந்தன் சரண்பணிய தழலாய்நின்ற தத்துவனே என்றார். இது தானெனது உலகமில்லை. சகமலாது அடிமையில்லை என்பதைக் குறித்தது. என்றும் உணர்வரிபவன் எங்கள் சிவன், அதுவே காப்பானது. அதுவே வலிமையைத் தருவது. ஆனதன்மையினாலே பிரமவிஷ்ணுக்களும் தாளாது அடிபணிகின்றார்கள்.

பாழான வினைகள் என்றது வினைகள் மரணத்தை வருவிப்பன அதோடு சிந்தையைப்பாழ் படுத்துவன. தெய்வத்தை உணரவிடாதிருப்பன. இப்பாழ்பட்ட சிந்தையை அறுத்தெறிபவன் சிவன் என்றதால் பாழான வினைதீர்க்கும் பரமன் என்றார்.

**எம்மான் எந்தைமூத்தப்பன் ஏழேழ் படிகால் எமைஆண்ட**
**பெம்மான் ஈமப் புறங்காட்டிற் பேயோ டாடல் புரிவானே**
**பன்மா மலர்க ளவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்**
**அம்மா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே.**

எமது கடவுள் எனது தந்தையின் கடவுள் மூத்த தந்தையின் கடவுள் அவரின் தந்தையின் கடவுள் இப்படி ஏழு சந்ததி அதற்கெல்லாம் கடவுளாகினாய். இப்படியான எத்தனையோ சந்ததி வரைக்கும் எம்மையாண்ட கடவுளே. சுடுகாட்டினிடத்து பேயோடு ஆடல்புரிவாய். பலபெருமலர்களான அவைகளை எடுத்துக்கொண்டு பலரும் வணங்குகின்ற பிரபுவே பழையனூரில் வீற்றிருந்து அருளுகின்ற பெருமானே! எனது தாயே தந்தையே திருவாலங்காட்டு ஈசனே! உன் அடியார்க்கு நான் அடியேன் ஆவேன்.

விசேடம்;—

எமது தந்தைக்குத் தந்தை அவரின் தந்தைக்கும் தந்தை இப்படியாக ஏழு முன்சந்ததிவரை எண்ணுகிறார் சுந்தரர். இந்தச் சந்ததி எல்லாம் அவனொருவனே கடவுளாக இருந்தான். இஃது முன்தோன்றிய மனிதர்க்கும் முன்னனவன் சிவன்

மையாக நடந்தும் எனக்கு உண்மையாகத் தரவேண்டிய இலங்கை சிவில்சேவைப் பகுதிக்கான பதவியை எமது அரசாங்கம் தராது விட்டுவிட்டதை எண்ணி மன வேதனை அடைந்தேன். எனக்கு அப்பதவி கிடைக்காமல் இருந்தாலும் என் கடமையை சரியாக செய்திருக்கிறேன். ஆனதினாலே இனி இளைப்பாறுவது தானே அடுத்த செயல் என எண்ணினேன்.

இப்படி எண்ணும் போது எமது வீட்டுக்கு முன் இருந்த சிவகடாட்சம் என்னும் பெயருடைய நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். சிவகடாட்சம் என்பவர் யோகசுவாமியினுடைய சிறந்த ஒரு பக்தர். அவருக்கு என்னுடைய பதவி பற்றி சொல்லி எதுவாய் இருந்தாலும் அரசாங்கம் தகமையை உணர்ந்து எனக்கு உரிய பதவியைத் தந்திருக்கவேண்டும். ஆனால் பதவிகிடைக்காவிட்டாலும் நான் அதில் அக்கறை கொள்ளாவிட்டாலும் மனதிற்கு கவலையாய் இருக்கென்றேன். அப்பொழுது சிவகடாச்சம் என்னை நோக்கி நீங்கள் ஒருக்கால் யோகசுவாமியைச் சந்தித்துக் கொண்டு கொழும்புக்குப் போங்கோ என்றார். அதன்படி ஒரு நாள் நானும் என் மனைவியும் யோகசுவாமியிடம் கொழும்புத்துறைக்குச் சென்றோம் சுவாமி அப்போது நோவுற்று நடக்க முடியாதிருந்த காலம் நாம் போன நேரம் சுவாமி அங்கு இருந்தார். எங்களைச் சுவாமி அழைத்து இருக்கச் சொன்னார். நாம் இருந்தோம். இருந்தபின்பு எங்கு இருப்பது என வினவினார். கந்தர்மடம் சிவகடாச்சம் வீட்டுக்கு முன்னுக்கு இருப்பதெனக் கூறி பின்னர் நான் இலங்கை நிர்வாகசேவையில் வேலை செய்கிறேன் எனக்கு இப்போது பதவி உயர்வு தரவேண்டிய காலம் ஆனால் எக்காரணமோ தெரியாது இலங்கை அரசு எனனைப் புறக்கணித்து விட்டது. அது எனக்கு பெரும்வேதனை என்று கூறினேன்.

அப்பொழுது யோகசுவாமி என்னை நோக்கி 'ஓ' அது உனக்கு வரவேண்டியது தானே அது சுலபமாகக் கிடைக்கும் அதற்கேன் வருத்தப்படுகிறாய் "சிவகடாச்சத்திற்கு முன்னால் இருக்கும் நீ ஏன் சிந்தை கலங்குகிறாய் சிவகடாச்சத்தின் முன்னால் இருக்கும் நீ ஏன் துன்பப்பட வேண்டும்" என்று பலதடவை திரும்பத்திரும்ப வலியுறுத்தி சொன்னார். நாங்கள் சுவாமியை வணங்கிவிட்டு இல்லம் வந்துசேர்ந்தோம். சில நாள் கழிய எனக்கு சிவில் சேவை பகுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்தது அம்முறை நடத்தப்பட்ட நேர்வில் நானே முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்பொழுது தான் சிவகடாச்சத்தின் முன்னால் இருக்கிறாய் என்று கூறி எமக்கு சுவாமி அருள்பாலித்தமை விளங்கிக்கொண்டேன். பின்னர் பல உயர்பதவிகளை வகித்து இளைப்பாறியிட்டு நமது நாட்டில் வேதாந்தமடத்தை சீரமைத்து நன்நிலைப்படுத்த சில தொண்டுகள் செய்கிறேன் என்றார் பகவதாஸ்.

## எச்சிலில் மோதிரம் தேடிய செட்டியார்

யோகசுவமியின் குருவானவர் செல்லப்பா சுவாமிகள். அவரது திருவருட்பேற்றினைப் பற்றி இங்கு நாம் எழுதிக்காட்ட முடியாது. "தன்னை உணர்ந்து தானும் ஒன்று இன்றி" எனவரும் கல்லாடர் வாக்கியத்தை நன்கு தெளிவதானால் செல்லப்பா சுவாமிகள் நிலை அதுவேயாகும். சுவாமிகள் வேதாந்த கொள்கையில் நின்றவர். அதாவது எங்கும் தானே அன்றி பிறிதான அன்னியம் காணாதவர். இது சொல்லளவில் அல்லது எழுத்தளவில் சுலபம்போல் காணப்படுமாயினும் செயலளவில் கடைப்பிடித்தொழுகுவதென்றால் செப்படிவித்தைகள் பலதினூடும் தளராது நிலைபெற்று வாழவேண்டும்.

வேதாந்தக்கல்வி பயில்பவர் பலரும் கல்வி என்னும் அல்லலால் மூடப்பட்டு அறிவிழந்து தான் என்னும் மமதை தலைப்படலால் மேற்கோள் பலவுடன் பல பல பேச்சுகள் நிகழ்த்த வல்ல பல சாமிகள் பேச்சாளர்கள் உண்டு இவர்களைப்பின்பற்றுவோர் பலருண்டு. ஆனால் இவர்கள் வேதாந்த நெறியில் ஒழுகுபவர் அல்ல.

வேதாந்தமாயினும் சித்தாந்தமாயினும் தன்னை இழத்தலேய தலைமையாகக் கொண்டன. வேதாந்திகள் தனை உணர்ந்தபின் தான் ஒருவரென எண்ணாத நன்மை தீமையற்ற சுகநிலையில் இருபார்கள். இவர்கள் நடைமுறைகளை நோக்கினால் ஓர் முதிர்ந்த பைத்தியக்காரன் போலவே இருப்பார்கள் ஆனால் அவருடைய சித்தம் ஒன்றிற்கும் எட்டொணாத திருவருள் நிலையில் நிற்கும்.

சித்தாந்த நிலையிலும் வழிபாடு இந்நிலையைத் தந்து நிற்கும். மாணிக்கவாசக சுவாமிகள் தமது திருவாசகத்தில் ஒரிடத்து "கோலமார் தரு பொதுவினில் வருகென" என்றுகூறித் தன்னை சிதம்பரத்துக்கு அழைப்பித்து அங்கு நான் வந்த பிற்பாடு "ஏல என்னை இங்கு ஒழித்தருளி" என்று கூறியிருக்கிறார். இதனால் தன்னை இழந்தபின் கடவுளே இருக்கக்கண்டேன் என கூறுகிறார். இதுவன்றி திருச்செந்தூர் அகவலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இப்பாடலால் தெரியப்படுத்தப் படுகிறது. அவரின் அருளிலாமல் அவன் திருவடி பணிய முடியாது என்பது இப்பாடலால் தெரியவருகிறது. ஏழேழு சந்ததிகளையும் தனது தொண்டுக்கு ஆளாக்குகின்ற அற்புதம் தொடர்ந்து பேசுகிறார்.

## சிங்கப்பூர் சைவரே சிந்தியுங்கள்

இந்தப் பாடலின் கருத்தையெல்லாம் சிங்கப்பூர் போய் மிலேச்சருக்குச் சேவைசெய்து காசு சேர்த்து விஞ்ஞான மூலம் கடவுளைக் காண அல்லது கடவுளைக் காட்ட முற்படும் சிங்கப்பூர் பென்சன்காரர் உணரட்டும். விஞ்ஞானம் கடவுளைக் காட்டமுடியாது. உண்மை ஞானந்தான் கடவுளைக் காட்டும். கடவுள் தான் கடவுளைக் காட்டுவாரே அன்றி காசு காட்டமாட்டாது.

சிங்கப்பூர் போய் காசு உழைத்து வந்த பலக்காரக் கூட்டம் ஏதோ தமக்குள் அறிந்துவிட்டோம் என நினைத்து எமது ஆலயங்களை விஞ்ஞானமயமாக்கி, இயந்திரமயமாக்கி பாழடையச் செய்கின்றனர். இந்தச் சிங்கப்பூர் குடும்பங்கள் எல்லாம் பாழ்பட்டுப்போம் என சிங்கப்பூர்சைவமக்கள் உடைய நலம் பொருட்டு நாம் தெரிவிக்கிறோம். மேலேயுள்ள பாடல் சான்றாகும். சைவம் விஞ்ஞானமல்ல விஞ்ஞானம் சைவமும் அல்ல. சைவம் தத்துவ உணர்ச்சியும் அல்ல சைவம் பக்திமையும் அடிமைத்தனமும் கொண்ட பரந்த சமயமாகும். சிங்கப்பூர்க்காரரின் ஆணவத்தடிப்பு இங்கு பயன்படாது. சிங்கப்பூர் மக்கள் கருதுகின்ற ஒலிபெருக்கி, வானொலி முதலிய விஞ்ஞானக் கருவிகள்மூலம் சமயப் பிரசாரஞ் செய்வது மனிதரில் சடப்பொருள் உணர்ச்சியை வளர்த்து ஆணவத்தைப் பெருக்கி சீவபோதத்தை வளர்க்கும். சிவபோதம் ஒருநாளும் தலைப்படாது. சிவகரணங்கள் தோன்றாது. சிங்கப்பூர் பென்சன் காரரிலோ அல்லது சிங்கப்பூர்போய்ப் பிரசங்கம் செய்து இங்கு பெருவாரி பொருள் கொண்டுவந்த எந்த ஒரு சமயப்பிரசாரகர் உண்மைபேணினர் என்பதை எமக்குக் காட்டட்டும், போகசுவாமி போன்ற ஒரு அருளாளரைக் கருதக்கூடியநிலையில் இருக்கிறார் காட்டட்டும், விஞ்ஞானமூலம் சமயப் பிரசாரத்தை ஊக்குவிக்கும் சிங்கப்பூர் மக்கள் அம்முயற்சியால் எத்தனை அஹிம்சை அன்பு தருமவிளக்கம் உடைய மக்களை உருவாக்கியுள்ளார்கள்? அப்படி ஒருவரைக் காட்டட்டும்? உண்மையில் சிங்கப்பூர் மக்களால் கௌரவிக்கப்பட்ட சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி களவிலாத பொய்பேசாத ஒருவரைத் தன்னை ஆதரிக்கும் கூட்டத்துள் காட்டுவாரோ? அவசர காலச் சட்டத்தின்கீழ் பல பொய் முறைப்பாடுகளைச் சொல்லி எம் பத்திரிகையைத் தடைசெய்விக்க முயன்ற சிவத்தமிழ்ச் செல்வி மனத்தூய்மை உடைய பெண்ணோ? சிங்கப்பூர் மக்கள் சைவம் விளங்கினால் பதிலரட்டும். இப்பாடலை நன்கு மனனஞ்செய்து அதன் கருத்தை மனதிலே பதித்து உணர்ந்த பின்னுதால் எமது சைவசமயத்துக்கு விஞ்ஞான யந்திர உபகரணங்களின் உதவி வேண்டுமா என்பதைச் சிங்கப்பூர்மக்கள் உணர்ந்து கொள்ளட்டும்.

முருகப்பெருமானுடைய அன்பர் சிற்றம்பல அடிகளும் "என்னை அகன்றேன் யான் அற ஈசன் தன் செயல் நடக்கும் தன்மையும் கண்டேன்" எனக்கூறியிருக்கிறார்.

இவைகளையெல்லாம் இன்று திருவாசகமணி அந்தமணி இந்தமணி இன்னும் பல வேறு மணிகள் தங்கள் மணிகளை கிடாங் கிடாங் என்று அடித்து ஆனந்தப்பட்டாலும் தெளிபுமோ தெரியாது. அல்லது எமது சைவப்புலவர்கள் குலை குலையென்று குலைத்தாலும் தெளிவரோ தெரியாது? அடுத்து பண்டிதர்கள் பண்டிதைகள் இடிடினாலும் உண்மை காண்பாரோ தெரியாது. பரமாச்சாரியர் முதல் பிரசங்காரர் "திகிணத்தோம்" என்று தாளம்போட்டு வீணையுடன் மேளமடித்து மின்வேகத்தில் 3 ஒலிபெருக்கியில் ஊதிரக் கத்தி ஊளையிட்டாலும் தெளிவரோ தெரியாது. ஐயோ இவ்வளவு பேருக்கும் (தான்) இருந்தால் காசு என்னென்று வங்கிறது அடுத்து இரகசியமாய் சில பானம் என்னென்று பருகுவது! அது முடியாது.

அஃதிருப்ப செல்லப்பா சுவாமிகளது வேதாந்தநிலை பலருக்கும் வைத்தியமாகவே இருக்கும். ஆனதினால் அவரை விசர்ச் செல்லப்பா என மக்கள் சொல்வர். இந்த விசர்ச் செல்லப்பர் பிச்சை எடுத்தற்காக பெரியகடை கதிரேசன் கோயில் முன்னுள்ள செட்டியார்கடை முகப்பில் வந்து நிற்கிறார்.

யாழ்ப்பாணம் கடைவீதியில் பிச்சைக்கு ஒரு காசு கொடுப்பது வழக்கம். இன்றும் நடைபெறக் காணலாம். அக்காலத்தில் ஒரு சல்லி அல்லது துட்டு, ஒற்றைச்சதம் பிச்சையாகக் கொடுப்பது வழக்கம். செட்டிவீடுகள் எக்காலத்திலும் இது கொடுக்கத் தவறுவதில்லை. ஆனால் வெள்ளிக்கிழமைகளில் தான் கொடுப்பது வழக்கம்.

ஆனல் செல்லப்பா சாமிகள் போனநாள் ஒரு வியாழக்கிழமை. செல்லப்பர் காலையில் போய் நின்றதும் வியாழக்கிழமையானதால் செட்டிக்குக் காசுகொடுக்க மனம் வரவில்லை. ஏனெனில் அந்த வழக்கத்தை வைத்தால் ஒவ்வொரு நாளும் பிச்சை வாங்க வருவார்கள் என்பதே செட்டியின் நினைப்பாகும். ஆனல் செட்டி கொடுக்கவில்லையே என்று செல்லப்பரும் அவ்விடத்தைவிட்டு நகராது வீதியின் ஒருபுறமாக வெயிலில் நின்றார். நீண்டநேரமாகச் செல்லப்பர் வெயிலில் நிற்பதைக்கண்டும் செட்டிக்கு மனமிளகவில்லை. செல்லப்பரும் நின்ற இடத்தைவிட்டுச் சிறிதும் விலகவில்லை. மத்தியான நேரமாகிவிட்டது. செட்டி சாப்பாட்டிற்குப் போகும் நேரம் மனமிளகி ஒரு சல்லி எடுத்து இந்தா என்று சொல்லிச் செல்லப்பரைநோக்கி எறிந்தான், அதை அவர் பக்குவமாக ஏற்று தன் சந்தை வேட்டியில் முடிந்துகொண்டு "அகப்பட்டுக்கொண்டாய்" என்று கூறிக்கொண்டு அவ்விடம்விட்டு

## பத்தர் சித்தர் பலர்ஏத்தும் பரமன் பழைய னூர்மேய அத்தன் ஆலங் காடன்றன் அடிமைத் திறமே அன்பாகிச் சித்தர்சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவன் ஊரன் ஒண்தமிழ்கள் பத்துப்பாடி ஆடுவார் பரமன் அடியே பணிவாரே.

பக்தர்களும் சித்தர்களும் ஆகும் பல அடியார்கள் போற்றும் கடவுளாய் பழையனூரில் வீற்றிருந்தருளும் எம் தந்தையாய் திருவாலங்காட்டில் இருந்தருளும் பெருமானின் திருவடிகளுக்கு நான் அடிமை என அவர் அடிமைத்திறத்திலே கருத்துடைய அன்பாகி சித்தர்கள் தம்சித்தத்தை வைத்த பெரும்புகழுடைய சிறுவர் நம்பியாரூரன் (சுந்தரர்) பாடிய இந்த பெறற்கரிய தூய தமிழான பத்துப் பாடலையும் பாடி ஆடுவார்கள் பரம்பொருளான சிவன் திருவடியை பணிவார் ஆகின்றனர்.

விசேடம்:—

இப்பாடலைப் பாடிஆடுவார் வேறுஎச் செயலை செய்யாதிருந்தாலும் பரமனைப் பணிகின்றார் என்பதாகும். இதுவே இப் பதிகத்தின் வரலாறு ஆகும். பக்தராக இருந்தாலும் சித்தராக இருந்தாலும் பரம்பொருளின் திருவடி போற்றுவாரே உண்மை உணர்ந்தார் என்கின்றார்.

சித்தராய் இருந்தாலும் சிவன் திருவடிக்கு அடிமை என்பதை உணராது இருப்பார் தூய நெறிக்கு ஆளாகார். சித்தர் சித்தம்வைத்த புகழ்ச்சிறுவன் என்பது அட்டமாசித்தி கைவரப்பெற்ற முனிவராயினும் சுந்தரமூர்த்தி சுவாமி திருவடிகளைச் சித்தத்தில் கொண்டிருந்தார் என்பது குறிப்பு. இதை எல்லாம் வெறும் ஒலிபெருக்கிப் பிரசங்கிகள் எவ்வாறு உணர்வார். எமது சமயநெறியில் பக்திமையும் அடிமையுமே தலை சிறந்தது என்பதாகும்.

அகன்றார். சிறிதுநேரம் கழித்துக் கடையிற்சாமி அவ்வழியால் வந்தார், பல சித்துக்கள்மூலம் யாழ்ப்பாணத்தை நல்லாய் வெருட்டிவைத்திருந்தார் கடையிற்சுவாமி. அவ்வழியால வந்த சுவாமிக்குச் செட்டி செல்லப்பரை வெயிலில் வைத்திருந்தது உணர்வில் தெரிந்தது. செட்டிமார் எல்லோரும் கடையிற்சாமிக்கு மிகுபயம். செல்லப்பருக்கு இழைத்த கொடுமையைச் செட்டிமாருக்கு உணர்த்தும் பொருட்டு அச்செட்டியின் கடைக்குள் கடையிற்சாமி நுழைந்தது. கடையிற்சாமி கடைக்குள் வரக் கண்ட செட்டி பயபக்தியுடன் எழுந்து வாருங்கோ சாமி எனக்கூறி வணங்கி மரியாதை செலுத்தினர். சுவாமி செட்டியாரை நோக்கி "எங்கடா உன மோதிரம்" எனக் கேட்டது. செட்டியார் கைவிரலைப் பார்த்தார். அவரது கையில் அணிந்திருந்த வைர மோதிரம் காணப்படவில்லை. ஒரு நாளும் கழற்ற முடியாத வைரமோதிரம் எங்கு போயிற்று என்ற பதைப்புடன் அங்கும் இங்கும் பார்த்தான் செட்டி. மோதிரம் காணப்படவில்லை. ஐயோ சுவாமி மோதிரத்தைக் காணவில்லையே என மிக்க பயத்துடன் கடையிற்சுவாமியை நோக்கிக் கூறினன். ஆனல் கடையிற்சுவாமி ஒன்றும் பேசாது அவ்விடத்தைவிட்டு நீங்கினர். செட்டி 'இதென்ன சுவாமி இப்படி வந்தவுடன் போறியள்' எனக் கூறிச் சுவாமியைப் பின்தொடர்ந்தான்.

செட்டி பின்தொடர வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் வயதலிற்குச் சமீபமாக கடையிற்சுவாமி வந்ததும் செட்டிமுன் காறி எச்சில் உமிழ்ந்தது. அந்த எச்சிலில் செட்டியார் மோதிரம் காணப்பட்டது. செட்டியார் எச்சிலுக்குள் தனது மோதிரத்தை எடுக்கும்போது கடையிற்சுவாமி அவரை நோக்கி "செல்லப்பனை விசரனென்று வெய்யிலிற்குள் வைத்தாயோ" எனக்கூறி அப்பால் போயினர். செட்டியார் பெரும் திகைப்புடன் செல்லப்பரைத் தெரியாது விசரன் என அவமதித்தேனே எனக் கவலையுடன் திரும்பினர்.

இஃதிருப்ப செட்டியாரின் நிலையில் பெரும் மாற்றங்கள் நடைபெற்றன. அன்றிலிருந்து தனது சொத்தெலாம் தருமத்திற்கே செலவுசெய்ய நினைந்தான். பெரும் அன்னதானங்களைக் கதிரேசன் கோவிலில் செய்தான். பின்னர் கதிரேசன் கோவிலிற்குப் பல ஆபரணங்கள் வாங்கிக்கொடுத்துத் தருவ நின்று இங்குள்ள சொத்துக்களை கதிரேசன் கோவிலிற்காக்கி யாழ்ப்பாணத்தை அறவேவிட்டு நீங்கித் தனது ஊர்சென்று அங்கு பற்றற்ற ஞானியானர்.

செல்லப்பர் செட்டியார் அகப்பட்டுக்கொண்டார் எனச் சொன்னதன் அர்த்தம் செட்டியார் தன்வழியில் பின்தொடரப் போகிறார் என்றதாகும்.

## திருப்பனந்தாள்மடமும் திருக்கேதீச்சரமும் என்செய்கின்றன

தென் இந்தியாவில் உள்ள திருப்பனந்தாள் மடம் திருக்கேதீச்சரத்தில் மகோற்சவம் நடைபெறும் காலத்தில் உற்சவத்தில் கலந்து சிறப்பிப்பதற்காக ஒரு ஓதுவாரையும் சொற்பொழிவுற்காக ஓர் சாஸ்த்திரிகளையும் கடந்த நாலு வருடங்களாக தமது சொந்தச் செலவில் அனுப்பி வருவதாக நமக்கு செய்தி சில தென்இந்திய சைவப்பத்திரிகை மூலம் தெரியவருகிறது. இம் முறையும் அதே மரபில் திருப்பனந்தாள் மடம் ஓர் ஓதுவாரையும் ஓர் சாஸ்த்திரிகளையும் அனுப்பியது. அவர்கள் சென்ற உற்சவத்தின் போது சொற்பொழிவும் பண ஓதுதலும் நடத்தினார்கள்.

ஆனல் இந்த இருவருக்கும் சன்மானம் கொடுக்க வேண்டும் என சாஸ்திரிகட்கு 5000 ரூபாவும் ஓதுவார்க்கு 2000ரூபாவும் என்ற ரீதியில் திருக்கேதீச்சர நிர்வாகம் பொதுமக்களிடம் பிரத்தியேகமாகப் பணம் சேர்த்ததாம இந்தப்பணம் யாருக்கு கொடுக்கப்பட்டது? திருப்பனந்தாள் மடத்து எஜமான் சுவாமிக்கு இச்செயல் தெரியுமோ! என்பது சந்தேகத்திற் கிடமானதாக சந்திர தீபம் கருதுகிறது.

திருப்பனந்தாள் மடம் பாடல் பெற்ற தலத்தை சிறப்பிக்க பணம் ஏன் பெறவேண்டும்? அடுத்து இந்த ஓதுவார்க்கும் சாஸ்த்திரிகட்கும் மடம் அவரது சேவைக்கு மானியம் வழங்கி வருவதாக அறிகிறோம். ஆனதினால திருப்பனந்தாள மடத்து எஜமான் சுவாமி இதன உண்மை வரலாறு பற்றியும் திருக்கேதீச்சர நிர்வாகம் சே...

செய்கிறது? என்பது பற்றியும் சைவ மக்களுக்கு வெளிப்படுத்தினல் நல்லது. அப்படிஅல்லாது மௌனம் சாதித்தால் இவர்கள் பொய்மையே பெருக்குகிறார் என சந்திரதீபம சைவ மக்களிடம் சொல்ல வேண்டிவரும்.

## பரமாச்சாரி பொய்யா? வீரகேசரிப்பத்திரிகை பொய்யா?

சில மாதங்கட்கு முன் புங்குடுதீவில் ஒரு கோவிலில் வைத்து இப்பொழுது ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோயிலில் பூசாரியாய் இருக்கும் புங்குடுதீவைச் சேர்ந்த குகதாசர் என்பவருக்கு நல்லை ஆதின பரமாச்சாரியார் (மணிஐயா) பிரதிட்டா இரத்தினம் எனனும் பட்டத்தைக் கொடுத்து பாராட்டி அவ் விழாவை ஒழுங்குசெய்த இளைஞரையும் பரமாச்சாரியார் பாராட்டினார் என்ற செய்தியை வீரகேசரி பத்திரிகைசிறப்புடன வெளியிட்டது.

ஆனல் என்னவோ தெரியாது சில நாட்களுக்கு முன் ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவில் 8ம் திருவிழாவிற்கு பிரசங்கம் செய்யவந்த பரமாச்சாரியார் அப் பட்டத்தை தான் கொடுக்கவில்லை யென்றும் யாரோ ஐயர்மார் அதைக் கொடுக்கும்படி வேண்டினர் ஆனல் வேண்டுதலை மறுத்தல் முறையன்று என்ற தன்மையால் கொடுத்தேன் என்று இரவு 11 மணியளவில் பல ஒலிபெருக்கிக் கோண் மூலம் உரத்த சத்தத்தில் கூச்சலிட்டார்.

ஏனைய வேளையிலும் பார்க்க அந்தச் சத்தம் மிகவும் உரப்பாய் இருந்தது. இப்படிப் பரமாச்சாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மணி) இரத்தினத்தைக் கொடுத்திட்டும் தான் அதற்குப் பொறுப்பில்லை எனக் கூறுவதன் மர்மம் என்ன? பலநாளும் பல கோயிலிலும் இரவு முழுவதும் கத்தும் மடைக்கு இரத்தினம் பாலும் உருண்டையும் முறையாகக் கொடுக்கவில்லை என்ற ஆத்திரத்தில் மணி வேதனைப் பட்டுக் கொண்டதோ அல்லது இரத்தினம் மணியிலும் உயர்ந்ததில்லை எனக் காட்டவோ பரமாச்சாரியான மணி இப்படிச்சொன்னதோ தெரியவில்லை.

திருஞானசம்பந்தர் மடம் என்று புத்தூர் மழவராயர் மடத்தைப் பேரிட்டு ஆதினம் நடாத்தும் பரமாச்சாரிய மணி ஏன் இந்தக்கதையை பிரசங்கத்தோடு சொன்னது. அடுத்து விளக்குமாத்துக்கதையும் பரமாச்சரிய மணி சொன்னது. கோயிலில் விளக்குமாறு செய்யும்பணியில் பதிஞயிரத்தில் ஒரு பங்காதல் பரமாச்சாரிய மணி செய்யுமோ? ணரட்டும். விளக்குமாறுக்கு காவியும் இலை கடுக்கனுமில்லை காருமில்லை. ஆனால் அது எம்பெருமான் திருநாவுக்கரசரது பரம்பரையின் திருச்சின்னம். காஞ்சியில் திருநாவுக்கரசரை வரவேற்று வணங்கிய காஞ்சிவாணர் கையில் விளக்குமாறு ஏந்தி வரவேற்றனர் என்பதை மணி உணரட்டும். பெரியபுராணத்தை ஒழுங்காகப் படித்து சைவ நெறியில் இனியாவது பாதகங்களையும் பேதமைகளையும இடைப்புகுத்தாது ஒழுங்காக நடக்கட்டும்.

தன்மனைவியையும் கைவிட்டு சாமிக் கோலம் காட்டி அடிக்கடி சில தாகத்திற்காக தென் இந்தியா போகும் பரமாச்சாரியர் தொடர்ந்தும் தேவையற்ற கதைகளைப் பிரசங்கத்தில் பேசி சைவநீதியை மாசுபடுத்தாது இருக்கும்படி அவரை மிகத்தயவாக கேட்கிறோம். தென் இந்தியாபற்றி நமக்கு அக்கறையில்லை. ஏனெனில் அங்கு சைவ நெறி சவ நெறயிலும் கீழ்மைப்பட்டுக் கொண்டது. எனவே யாழ்ப்பாணத்தில் சிறிது நல் ஒழுக்கமும் வைதிக வாழ்வும் உண்டு. அதைக் கெடுத்திட வேண்டாமென்று பரமாச்சாரியரையும் அவரது ஆதரவாளர்களையும் ரசிகர்களையும் சந்திர தீபம் கேட்டுக்கொள்கிறது.

அடுத்து வீரகேசரி பத்திரிகையாளரும் சைவ நெறியில் மேற்கூறியன போன்ற சம்பவங்களைப் பிரசுரிக்கும் போது முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவார் செயல்களை நனகு அவதானித்த பின் செய்திகளைப் பிரசுரிப்பார்கள் என நம்புகிறோம். பட்டம் கொடுத்தவர் தான் பொறுப்பில்லை என பின்னர் தெரிவித்தால் இத்தகைய பேதையரை பெரியவர் எனப்போற்றும் பத்திரிகை எத்தகையது என்பதை சைவ அறிஞர் உணரட்டும். காசுக்காகப் பத்திரிகையை நடத்துவதிலும் கண்ணியமுடன் பத்திரிகையின் கெளரவத்தினையும் எண்ணி இத்தகைய செயலை வீரகேசரி நிதானமுடன் பிரசுரித்து எமது சைவ நெறியில் போலித்தனத்தையும் பொய்மையையும் பெருக்காது மேன்மை கொள் சைவநீதியை பேணிக்காக்கும் பாரம்பரியத்தை இனியாதல் செய்யுமென நம்புகிறோம். பட்டம் கொடுத்தவர் தான் அதற்குப் பொறுப்பில்லை என்னும் போது அந்தப் பட்டமளிப்பு விழாவைச் சிறப்பித்து செய்திதருவது எவ்வளவு பேதமை என்பதை பத்திரிகை ஆசிரிர குழு உணரட்டும்.

பல பொறுப்புக்கள் வகித்தஸ்ரீகாந்தா, யாழ்ப்பாணத்திலேயே வைத்திய பரம்பரையில் வற்றாத நீரூற்றுப்போல் வைத்தியம் செய்துவரும் கஸ்தூரியார் முத்துக்குமாருவின் மருமகனான டாக்டர் பசுபதி அவர்களும் புவனேசுவரி அம்பாளின் இருகண்களான மதிக்கத்தக்கதாக இருக்கும்போது அந்தச் சுதுமலையில் குடிகொண்டிருக்கும் புவனேசுவரி அம்பாள் புண்ணியம் செய்தாள் எமைக்காக்க என்று கருதிஇருக்க அவ்வாலயத்தில் கண்ணியமற்றசெயல்களும் காட்டி மறைப்புக்களும் காண்போர் கண்களை உறுத்துவதாக உணர முடிகிறது

பேராயிரம் கொண்டவர்கள் சுதுமலையில் இருக்கும் போது பேரம்பலம் எனப்பெயர்பெற்று அம்பாளின் கடாட்சத்தால்'மணியகாரனென்ற பெயரொன்றும் பெற்றுவிட்ட பேரம்பலமவர்களுக்கு தெய்வ சன்னிதியில் இப்படியான பேதைத்தனங்கள் இடம் பெறுவது பெருமகிழ்ச்சியைக் கொடுககிறது போற் தெரிகிறது. இல்லாவிட்டால் எல்லா விஷயங்களும் ஏன் சந்திசிரிக்க வைக்கிறது எனச் சந்திரதீபம் கேட்கிறது.

# கன்னியர் கடலை வாங்கிட காளையர் கேட்டுப் பார்த்திட கலகம்

## துர்க்கை அம்மன் கோயில் போவாரின் காதல் நாடகங்கள்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் இன்று யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க் கிழமைகளில் காசு தேடித்தரும் பிரபல கோயிலாக வந்துள்ளது. இன்று கலியாணம் காசு சாமச்சித்தி முதல் பலவற்றையும் தந்து நிற்கிறாள் துர்க்கை எல்லோரும் வாருங்கள் துர்க்காவைக் கும்பிடுங்கள் வேண்டிய வரமெல்லாம் தருவாள் துர்க்கை என்று அதன் திருப்பணிச்சபைத் தலைவி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிரசாரம் செய்து வருகிறார்.

இதனால் வேளைக்கே திருமணம் செய்யவிரும்பும் கன்னியர் பலர் செவ்வாய் தோசத்தால் ஏற்பட்ட சங்கடம் நீங்க துர்க்கை கோயிலுக்கு போவார் ஆளை ஆள் பார்த்துப் பார்த்து கூட்டம் கூட்டமாகச் செல்லத் தலைப்பட்டனர். இவர்களின் எணிக்கை பெருகப் பெருக துர்க்கை கோயில் நிர்வாகம் இவையாவும்துர்க்கையின் அற்புதமே என அதிசயித்து அரோகராச் சொன்னது.

என்னிடம் பலர் அவ்வளவு சனம் போறதால் அங்கு ஏதோ இருக்கத் தானே வேண்டும் எனக்கேட்டார். நான் அப்போது சொன்னேன் ஐயோ நீங்கள் சொல்வது பிழையென்று சொல்லவில்லை. ஏனெனில் காலப்புரட்சியில் துர்க்கை கோயிலுக்கும் ஒருகாலம் பிறந்துள்ளது. இந்த துர்க்கை கோயில் ஒருவரும் திரும்பிப்பாராத நிலையில்பாழடைந்து இருந்தது. அன்று இந்தக்கோயிலில் கலியாணப் பேச்சு இடம் பெறவில்லை. ஆனதினால் துர்க்கை கோயிலுக்கு போவதால் கலியாணம் வருமென்று 100 வருடங்களுக்கு முன் பிரசாரம் செய்திருந்தால் வேளைக்கு விடயம் வேறாய் இருந்திருக்கும். ஆனால் இப்பதான் இந்த யுக்தி நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது. அதுவும் சிங்கப்பூர் போய் அங்கிருந்து வந்த காசும் மூளையும் துர்க்கை கோயிலை பல கன்னியரும் விரும்புமாறுசெய்து விட்டது. எனவே கன்னியர் பலர் போக அவர் நோக்கமறிந்து காளையர் பலர் போக நோக்கம் வேறு வேறாக விநோதம் விருப்பு முதல் பலவும் சிறக்க பலரையும் அங்குபோக வைக்கிறது.

ஒருகோயிலில் ஒருத்தரும் கும்பிடப் போகாதிருந்தாலும சின்னமேளம் நடந்தால் அன்றைக்கு அக்கோயிலில் கிழடு முதல் பாலர்வரை சனம் அடிச்சு விலகேலாமல் இருக்கும். ஆகவே கோயிலில் சின்ன மேளத்தின் மனப்பாங்கு எவ்வளவு பெரிதென உணருங்கள். அதேபோன்று துர்க்கைகோயிலும் செவ்வாய்க் கிழமையும் சின்னமேளத் திருவிழா போன்றுள்ளது இதில் ஏதும் வியப்பில்லையெனக் கூறினேன்.

நாயன்மார் காலத்துக் கோயிலெல்லாம் கும்பிட்டு மனத்தூய்மை பெற உற்றதாக இருந்தன. ஆனால் துர்க்கைகோயில் போன்ற ஆலயங்கள் கும்பிட்டு மனஅழுக்கை பெருக்கும் இடமாகவந்துளன. துர்க்கை கோயிலில் பல காலமாக தொடர்து வரும் அழுக்குடைய சம்பவங்கள் மேன்மை கொள் சைவ நீதி அல்ல என்பதைச் சுட்டிக் காட்டல் நாம் சைவ கலாச்சாரத்தை பேணிக் காப்பதற்கு பத்திரிகை நடாத்துவதால் வந்த செயலாகும்.

இதனைப் பலரும் உணராமல் நாம் துர்க்கை அம்மன் கோயிலைக் குற்றம் சொல்லுகிறோம் என தெரிவிக்கிறார்கள். ஒரு நாட்டில் நன்மை விளைய வேண்டின் ஆலயத்தில் நன்மை இருக்கவேண்டும். நன்மையென்பது யாது? காமம் பொறாமை கோபம் இவையில்லாததே நன்மை. இவையிருந்தால் தீமை. ஒரு கோயிலில் உள்ள கடவுள் மூலம் ஒருவரைக் கொலை செய்வதென்றால் ஒருவர் கற்பிழப்பதென்றால் பொறாமைப் படுவதென்றால் அதை உயர்ந்த நெறியுடைய கோயிலென்று சொல்லலாமோ! அந்தக் கோயிலை வணங்கி ஒருவர் நன்மை பெறுவாரோ; இதை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை தலைமையில் வைத்து இயங்கும் தெல்லிப்பளை மக்கள் உணரட்டும்.

தெல்லிப்பளை மக்கள் திருநீற்று குறியையும் வைத்துக் கொண்டு கொலை செய்வார் பொய்யும் பேசுவார் எவ்வழியால் என்றாலும் தமக்கு காசுவந்தால் பெரிதென நினைப்பார் தமக்கு வந்த செல்வப் பெருக்கம் கடவுளருளென நினைப்பார். இது முற்றிலும் தவறானது என்பதை சைவசமயத்தின் உயர்ந்த மாண்பை உலகிற்கு எடுத்துக் காட்டவந்த சந்திரதீபம் உறுதியுடன் தெரிவிக்கிறது. சைவம் காசின் பெருக்கமல்ல பொருளின் பெருக்கமல்ல திருவருளின் பெருக்கம். திருவருள் கடாட்சத்தால் தீமைகளை நீக்கி சிவநெறி காட்டுவதே சைவம், ஆனதினாலே துர்க்கைகோயில் நிர்வாகம் உண்மைப் பொருளைஉணர்ந்து இனியாவது அதன்படி நடக்குமென நம்புகிறோம்.

கலியாணப் பேச்சு முழுப்பொய்ப் பிரசாரமென்பதை திருப்பணிச் சபைத் தலைவி தங்கம்மா அப்பாக்குட்டி கலியாணம் செய்யாதருப்பது எடுததுக் காட்டுகிறது. முனைவர் கோயிலை புனருத்தாரணம் செய்யப்பாடுபட்ட பொன்னம்பலத்துக்குகலியாணமும இன்னும் இல்லை. அவர் நோய்வாய்ப்பட்டு பெரும் துன்பப் படுகிறார். சில மாதத்துக்கு முன்னர் கூட்டமாகச் சென்ற கன்னியர் கடலை வாங்கினராம் அவர் அருகேசென்ற காளையர் சிலர் கடலை கேட்டுப்பார்த்தனராம் வாக்குவாதம் மூண்டது பின்னர் இது கைகலப்பில் முடிந்தது.

# சுதுமலை அம்மன் கோயில் நிர்வாகம் என்று சீர்திருந்தும்?

கோயில் என்பது கடவுள் உறையும் இடம். அங்கு கருணையே உருவமாக காட்சி தருவார் கடவுள். கடவுள் என்று நாம் கூறும் பொழுது ஆணடவன்-ஆண்டாள் என்பதையே குறிப்பிடுகிறோம். மனிதனை உயர்திணையாகக் கருதும் போது மனுஷியையும் உயர் திணையாக கருதுகிறோம். சிலவேளைகளில் அன்பின் வசத்தால் உயர்திணை அஃறிணையாகவும் மாறுபடும்.

கருணையே உருவான அம்பாள் சந்நிதி கவலைதரு சந்நிதியாக மாறி வருவது ஏன் என்பது புரியாத புதிராக உள்ளது. அதுவும் புதுமைகள் செய்யும் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் சில சிறுமைகளும் நடப்பதாக அறியும்போது யார் தான் கவலை கொள்ளாதிருக்க முடியும். சுதுமலை மக்கள் செய்த புண்ணியத்தால் அருள் பரப்பும் புவனேஸ்வரி அம்பாள் இம்முறை ஏற்பட்ட மின்சாரப் பற்றுக் குறையால் இருளில் மூழ்கடிக்கப்பட்டாரென தெரிய வருகிறது. மின்சாரத் தட்டுப்பாட்டை முன்னமே அறிந்திருந்த மேலிடம் உபயகாரரிடம் அபயம் அபயம் என்று கூறி கூடுதலாக எண்ணெய் வாங்கியும் வெளிச்சத்தை ஏற்றாது வெறுமனே இருட்டில் அம்மையையும் அடியார்களையும் தவிக்க விட்டது தவிர்க்க முடியாத செயலால் அல்ல என்பது புலனாகிறது.

என்னதான் இருந்தாலும் சுண்ணம் இடிப்பது முகாமையாளருக்குத்தான் உரியது என்ற எண்ணத்தை எல்லோருக்கும் ஊட்டமுற்பட்டது முகாமையாளரின் தவறென்பது புலனாகிறது. சுண்ணத்தை இடிக்க முற்பட்ட முகாமையாளர் தம் கண்ணை களஞ்சிய அறையில் பதியவைத்திருந்தது அவரின் பற்றுள்ளத்தையே பறை சாற்றுகிறது. சுண்ணம் இடிப்பதை நிறுத்தி களஞ்சிய அறைக்குச் சென்று திரும்பி வந்து தொடர்ந்தும் தாமே இடிப்பது தவறென்பதை முகாமையாளர் முன்னமே தெரிந்திருக்கவில்லைப் போலும்.

எய்தவன் இருக்க அம்பை நோவானேன் செய்வதையும் செய்துவிட்டு மக்கள் தெய்வத்தைக் கும்பிட வரும்போது செய்வதறியாதவர் போல் தம் செருக்கை அடியவர் மேல் அள்ளி வீசமுற்படும் முகாமையாளர் அன்றொருநாள் உற்சவத்தின்போது பால் கொண்டு வந்து அம்பாளுக்குக் கொடுத்து முகாமையாளரின் சுண்ண இடிப்பை வைத்தகண் வாங்காது பார்த்திருந்த பாட்டிக்குப் பாதகமான வார்த்தைகளை வாயால் கூறியதேன்? இப்படியாக நமது தெய்வ சந்நிதிகள் மாறிவிட்டதை மணியகாரன்மார் மாற்றியமைக்க விரும்பவில்லைப்போலும்.

முன்னைநாள் யாழ்மாவட்ட அரசாங்க ஏஜண்டாக இருந்து பின் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சின் காரியதரிசியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனதில் மாசு இலாது வாழ்தல் எல்லாத் தருமமும் செய்வதை ஒக்கும். அது இல்லாதார் செய்யும் செயல் அனைத்தும் ஆகுலத்தை வருவிப்பன.**

# சந்திரதீபமூலம் நுவரெலியா அன்பர் காண்பிக்கும் நற்கருத்துக்கள்

''உண்மையும் கபடமற்ற அன்பு நெறியுமே எல்லாம் வல்ல கடவுளை அடைவதற்குரிய மார்க்கம்'' என்று யோக சுவாமிகளும் கள்ளங்கபடமற்ற தன்மையும் உண்மையான அன்பும் பரமனை அடையஉற்ற பாதைகளாகும் என்று ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் அருளினார்கள். தாயுமான சுவாமிகள் உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும், பொய்மை பேசாதிருக்க வேண்டும் என்று துதித்தார். உண்மை பேசாதோரைப் பஞ்ச மாபாதகர் என்று வேதங்கள் கூறுகின்றன. பொய் பேசி பாதகச்செயல் புரிந்து பொய்மை வாழ்க்கைவாழ்ந்து மீண்டும் மீண்டும் பிறப்பதற்காக இறக்காது உண்மையே பேசி அதன் வழி நின்று பிறவிக் கடலைக் கடந்து இறைவனடி சேர்வதே மாந்தர் கடமை. இறைவனின் பெருமையைத் தெரிந்து கொள்ளாது அவன் திருவிளையாடல்களைப் புரிந்துகொள்ளாது, அவனை உணர்ந்து கொள்ளாது வாழ்க்கையைச் செப்பனிடுவதற்காகவும் சமூகத்தில் பெரிய மனிதராக வாழ்வதற்காகவும் விபூதி தரித்துப் பொய் வாழ்க்கை நடத்தும் உலுத்தர்களால் உலகை ஏமாற்ற முடியுமேயன்றி உலக நாயகனை அடைய முடியாது. அதர்ம வழிகளில் பொருளீட்டிப் பெயருக்கும் புகழுக்கும் கோயில் கோபுரம் கட்டிவிப்பவர்களாலும் அபிஷேகம் பூசை திருவிழாச் செய்விக்கும் பெரிய மனிதர்களாலும் இறைவனை அடைய முடியாது. பிள்ளையார் சுழி போட்டு கள்ளக்கணக்கு எழுதியும் கள்ளகடத்தல் செய்தும் கலப்படம் செய்தும் இன்னோரென்ன ஏமாற்று வழிகளில் பொருளீட்டுபவர்களாலும் தினமும் கோயிலுக்குப் போய் வந்து உலகிலுள்ள பாதகச்செயல் அவ்வளவையும் செய்து பொருளீட்டுபவர்களாலும் யார்குடி கெடினும் எனக்கு வார் மிளகுச் சாற்றை என்பது போல் எப்படியாகிலும் தான் ஆடம்பரமாக வாழ்ந்தால்போதுமென்று எண்ணிக் கொள்ளையடிக்கும் பகற் கொள்ளைக்காரர்களாலும் மணிகொள்ளைக்காரர்களாலும் ஒளி மயத்தேவனாகிய கடவுளை அடைய முடியாது. ஒரு கற்பூரக் கட்டியேனும் கோயிலில் கொழுத்தும் போது இது எந்த வழியில் நின்று தேடியபணத்தில் வாங்கப்பட்டது என்று சிந்திக்க வேண்டுமென ஒருபெரியார் கூறினார். எம்மிற் பலர் அதைச் சிந்திப்பாரில்லை. மற்றையோரைக் கொள்ளையடித்துக் கோபுரம் கட்டுவிக்கப் படுகின்றது. உண்மைக்கும் நேர்மைக்கும் புறம்பான வழிகளில் நின்று மனச்சாட்சிக்கும் விரோதமாகத் தேடும் பணத்தில் கோவில் கட்டுவிப்பதிலும் பார்க்க உண்மை பேசும் பிச்சைக்காரனாக இருந்தாலும் ஆண்டவனை அடைய முடியும். கோடீஸ்வரன் வீட்டில் நவக்கிரகம் போல் பிள்ளைகள் பிறந்து நிம்மதி இல்லாதிருப்பதன் காரணம் என்ன? சோறுசாப்பிட முடியவில்லை. சீனி சேர்த்து தேநீர், கோப்பி குடிக்கக் கூடாதாம் என்று புலம்புவதன் காரணம் என்ன கந்தசுவாமி கோவிலுக்கு கோபுரம் கட்டுவித்தேன் பத்திரகாளி கோவிலுக்கு தேர் செய்வித்தேன். அதைச் செய்வித்தேன் இதைச் செய்வித்தேன் என் குமருக்கு இன்னமும் கலியாணமாகவில்லையே என்பிள்ளை இஞ்சினியராகவோ டாக்டராகவோ படிக்கவில்லையே என்று குமுறுவதன் காரணம் என்ன? என்பவைகளை சிந்திக்காது வேதசிவாகமங்களில் கூறப்பட்டவைகளை அறிந்து கொள்ளாது காலத்துக்குக் காலம் தோன்றிய அவதார புருஷர்கள் அருளியவைகளைக் கடைப்பிடித் தொழுகாது ஆசைவயப்பட்டு அல்லவை செய்து அதர்ம வழிகளில் பொருள் ஈட்டிப் பெரிய மனிதர்களாகித் துன்பப்படுகின்றார்கள். பற்றற்றான் பாதங்களைப் பற்றும் மார்க்கத்தைக் காட்டுகிறோம் என்று மடங்கள் அமைத்து நீண்ட பெயர்களைச்சூடி உண்மைக்கும் நேர்மைக்கும் புறம்பான வழிகளில் பணம் சேர்க்க முயலும் சுவாமிகளாலும் ஆண்டவனை அடையமுடியாது. உண்மை வாழ்க்கை வாழாத கற்றதன்படி ஒழுகாத காமம் கஞ்சத்தனத்தை துறக்காத போலி வேஷதாரிகளால் ஆண்டவனை அடையவோ அவனை அடையும் மார்க்கத்தில் மக்களை இட்டுச் செல்லவோ முடியாது. சத்திபதேவனை நெஞ்சத்து வைத்துப் பூசிப்பவர்கள் காவியுடுக்கவோ மயிரை வளர்க்கவோ அல்லது மொட்டை வெட்டவோ அவசியமில்லை. ஆண்டவன் அவதாரமாகிய யோக சுவாமிகள் என்ன வேடந்தாங்கினார்? வெள்ளை வேட்டி சால்வை தரித்து மக்களிடையே மனிதனாக நடமாடிய தெய்வம் யோகசுவாமிகள். தம்மைப் பூரணமாக ஒப்படைத்துச் சரணாகதியடைபவர்களை பேரானந்தத்தை அனுபவிக்கச் செய்யக்கூடிய ஆற்றல் படைத்த யோக சுவாமிகளை யாரும் பயன் படுத்தவில்லை. அவரின் அடிசார்ந்து ஆண்டவனை அடைய எண்ணவில்லை பெரியர் கோயிற் கைங்கரியங்களைச் செய்வதும் ஒழுக்கநெறியற்ற பிராமணர் கும்பாபிஷேகம் செய்வதும் ஒன்றுதான். அவர்களால் ஆண்டவன் உறையக்கூடிய புனிதமான கோவில் கட்டுவிக்க முடியாது, இவர்களால் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்ய முடியாது. அவர்கள் கொள்ளையடித்துச் செய்கிறார்கள். இவர்கள் ஒலி பெருக்கியில் மந்திரத்தைச் சொல்லுகிறார்கள். நேர்மையான வழியிற் தேடிய பணத்தில் தூயமனத்துடன் கோயிற் கைங்கரியம் செய்யவேண்டும். தூயமனத்துடன் மந்திரங்களைப் பயபக்தியுடன் ஜெபம் செய்தாற்றான் மூர்த்தி உறைவான். யார் அங்ஙனம் செய்கிறார்கள்?

''மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானஞ்செய்வாரில் தலை'' என்றார் வள்ளுவர். தவமும் தானமும் செய்வதிலும்பார்க்க உண்மை பேசுதலே தலையாயது. ஆகவே உண்மைபேசாது பாதகமான வழிகளில் பொருளீட்டிப் பெரிய மனிதராக ஊரை ஏமாற்றி வாழாது ஆதி சங்கரர், இராமனுஜர், இராமகிருஷ்ண பரமஹம்சர், ஞானானந்தர், அரவிந்தர், சிவானந்தர், ரமண மகரிஷி, பூண்டிச்சாமி, சிவபாலயோகி யோகசுவாமிகள் போன்ற அவதார புருஷர்கள் அருளியவைகளையும் சமய குரவர் சந்தானகுரவர்கள் அருளியவைகளையும் கடைப்பிடித்தொழுகி இறைவனடி சேருவோமாக.

எமது பிதா பரமன். எமது மாதா ஜெகன்மாதா. நாம் நாற்பத்தெண்ணாயிரங்கோடி சகோதரங்கள் உலகின பல பாகங்களிலும் வாழ்கின்றோம். உலகிலுள்ள ஜீவராசிகள் அத்தனையும் ஆண்டவன் குழந்தைகள்; தன் சகோதரங்கள்; தாம் எல்லோரும் ஒருகுடும்பத்தவர் என்ற பாச உணர்வு எவனுக்கு ஏற்படுகின்றதோ எவன் எல்லா உயிர்களிலும் அன்பு செலுத்துகிறானோ அவன் ஆண்டவனின் அன்புக் குழந்தையாக இருப்பான். அன்புமயமான இறைவனை அடைய அன்பு செய்யும் பண்பும் வேண்டும். பிற உயிர்களில் அன்புசெலுத்த இரக்கசிந்தை வேண்டும், வஞ்சனை சூதுவாது பொறாமை போன்ற தீயகுணங்கள் இருக்கக்கூடாது. மேலோர் கீழோர் என்ற பேதமோ ஆண்டான் அடிமை என்ற எண்ணமோ பறையன் பிராமணன் என்ற பாகுபாடோ மனிதன் மிருகம் என்ற வேற்று உணர்வோ இருக்கக்கூடாது. பிற உயிர்களில் அன்பு செலுத்தாதவர்களே கொலை, களவு, புலால் உண்ணல், காமம் [illegible] பொய்

## உண்மையே கடவுள் எனச் சைவம் தெரிவிக்கிறது

## உண்மை அன்றி ஆண்டவனை எவராலும் அணுகமுடியாது

ஆகிய பாதகம் செய்வர். பகவானின் குழந்தையாகிய தம் சகோதரங்களைக் கொலைசெய்யவோ, அவர்களின் உடமைகளைக் களவு செய்யவோ அல்லது ஏமாற்றிக் கொள்ளையடிக்கவோ கொலைசெய்தோ செய்விததோ அவற்றின் ஊனை உண்ணவோ, கற்பைச் சூறையாடவோ பொய்பேசி ஏமாற்றவோ எண்ணுதல் கூடாது. சகோதரங்கட்குத் துரோகம் செய்யக் கூடாது. எவனிடம் பாதகக் குணங்களில்லாது அன்பு ஊற்றெடுக்கின்றதோ அதன்வழிநின்று பிற உயிர்களில் அன்பு செலுத்துகின்றானோ அவன் அன்புமயமான இறைவனை அடைவான். பிற உயிர்களில் அன்பு செலுத்தாது பாதகச் செயல்களைச் செய்பவர் கோவில்கட்டுவித்தாலும் இறைவனை அடைய முடியாது. ஆகவே உலகிலுள்ள ஜீவராசிகளில் அன்பு செலுத்தி எல்லோரும் ஒரே குடும்பமாக வாழ்ந்து ஆண்டவன் அன்புக் குழந்தைகளாகிப் பிறவிக் கடலைக் கடப்போமாக.

உண்மைபேசி அதன்வழி நின்றும் அன்புநெறி நின்றும் இறைவனை அடைய நாம் காசிக்கு யாத்திரை போகவேண்டாம், கோபுரம் கட்டுவிக்கவேண்டாம். ஒலிபெருக்கி வைத்து அபிஷேகம் பூஜை திருவிழாச் செய்யவேண்டாம். ஆடு கோழி வெட்டவேண்டாம். ''காயமே கோவிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமது இலிங்கமாக நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர்அமையவாட்டிற் பூசனை ஈசனார்க்கும் போற்றவிக் காட்டினோமே என்றார் அப்பர் சுவாமிகள். பொய்; களவு, வஞ்சகம் சூது பொறாமைபோன்ற கொடிய பாம்புகளை இதயத்திலிருந்து விரட்டிவிட்டு எல்லாம் வல்ல இறைவனை அங்கு பிரதிஷ்டைசெய்வோம். எவன் கொடிய குணங்களை எரித்து இதயத்தைச் சுடுகாடாக்கிவிடுகிறானோ அந்த சுடலையாண்டி உறைந்துவிடுவார். அவனை நல்வழியில் இட்டுச் செல்வார். கொடிய பாம்புகளை நெஞ்சகத்தே வைத்துக்கொண்டு கோவிற் கைங்கரியங்கள்செய்தாலும் வேஷம்போட்டுச் சமயப்பிரசங்கங்கள் செய்தாலும் இறைவனை அடைய முடியாது. கூலி பேசிக் கும்பாபிஷேகமசெய்யும் குருக்கள்களாலோ பணம் வாங்கிச் சமயப் பிரசங்கங்கள் செய்தாலும் இறைவனை அடைய முடியாது. ஆண்டவன் நாமத்தை ஜெபம் செய்யக் கூலி கேட்கிறது ஒருகூட்டம். பாமரமக்களின் அறியாமை இருளை நீக்குவதற்குப் பிரசங்கம் செய்யப் பணம் வாங்குகிறது ஒருகூட்டம். என்ன கொடுமை. அவதாரபுருஷர்களும் நாயன்மார்களும சைவசமயப் பெரியார்களும தங்கட்காகவா மந்திரங்களையும் தேவார திருவாசகங்களையும் அருட்பாடல்களையும பாடினார்கள்? பணம் வாங்கியா ஏட்டில் எழுதி வைத்தார்கள்? அத்தகையோரின் சரித்திரத்தையும் பாடல்களையும் பிரசங்கம் செய்து பணம்தேடும் இருண்ட உள்ளம்படைத்த சுவாமிகள் சுவாமிகளா? இவர்களால் ஆண்டவனை அடையமுடியுமா? இல்லவே இல்லை. ஆகவே உண்மை அன்பு என்னும் இரு கால்களிலும் நின்று இதயத்தில் இறைவனைப் பிரதிஷ்டைசெய்து சதா அவனைப் பூசித்து அவனடி சேருவோமாக.

# கோயில்மண்டபத்தில் நாயும் புலியும் விளையாட்டு நடைபெறுகிறது

போயும் போயும் பூசைநேரத்தில் நாயும்புலியும் விளையாட்டு நடக்கின்றது நமது மூத்தவிநாயகர் ஆலயத்தில். ஆசிரியர் கூட்டமும் அமர்ந்திருந்து டாக்க சாயரட்சைப்பூசைநேரம் வாயசைத்துக் கத்தி வடிவாக விளையாடுகிறார் கரப்பந்தாட்டம். ஏனோ தெரியவில்லை வீதியோரத்தில் வீற்றிருக்கும் மக்கள் பணியோசை கேட்டுத்தானும் பிணியகற்றும் பிள்ளையாரை வழிபட முனவருகிறாரில்லை. பாலகனாய் இருந்த சுப்பிரமணியன் பக்கத்திருக்கும் பார்வையர்கள் அவரைப் பாலசுப்பிரமணியன் என்று அழைப்பதை விரும்ப விட்டாலும் அவருக்கு அப்பெயர் நிலைத்துவிட்டதனால் பாலகன்தானே! இவனன்று கருதிப்போலும் முன் இருக்கும் உண்டியலைத் திறந்து பணத்தையெடுக்க இறைச்சிமணத்தால் வாயூறி இரைத்து இரைத்து ஓடி இறைச்சிக் கடையை அடையுதாம் அப்பணம்.

வெற்றிலை மடிப்பைபக்கண்டு வேறு விஷயங்களைப் பேசாது விட்டுவிடும் மேலிடத்தாரால் மலிந்துவிட்ட சில தவறுகள் இன்றும் கொடிகட்டிப் பறக்குதாம் கோயிலில.

சென்ற மாசிமாதத்தில் நடைபெற்ற சிவராத்திரி உற்சவத்தின் போது இந்த ஆலயத்து வீதியிலே புளிச்சிட்டலைற் வெளிச்சத்தில பாங்காய் நடந்த காப்பந்தாட்டத்தால் சிவராத்திரி உற்சவம் சிறிது பாதிக்கப்பட்டதாம். ஆடி ஓடி விளையாடுவதில் ஆசைமிகுந்த அறுபது வயதுக்கும் மேற்பட்ட கிழங்களெல்லாம் அன்றைய சிவராத்திரி முழிப்பைக் கரப்பந்தாட்டத்தால் நிறைவேற்றிக் கொண்டதாம்.

கோயி வீதியெல்லாம் ஒரே கொண்டாட்டம். மின்லைற்றிற் வேடிக்கை, விநோதம். பலகார ருசியுடன் பாவையரைப்பற்றிய ருசியான சினிமாப் பாடல்கள். பூசைநேரத்திலும் கூடப் பாப் இசைப் பாடல்கள். இத்தனையையும்கண்டுகொண்டு மூத்த நயினார் ஆத்திரப்படாது இருப்பது விநோதக்குரியது.

# மொடேண் சிவத்தமிழ் ஆதரவாளர் முணுமுணுக்கின்றனர்

சுதுமலை வடக்கு
மானிப்பாய்.

சந்திர தீபம் ஆசிரியர் அவர்கட்கு,

சென்றமாதம் வெள்ளிக் கிழமை (4-1-198[illegible]) சுடர் 6 வெளிவந்த பத்திரிகையில் கும்பாபிசேகம் செய்யச் சென்ற மொடேர்ண் குருக்களைப்பற்றி உமக்கு என்ன கதை. அவருடைய கால்த் தூசிகூடி வராத முட்டாளே. தணிகாசலத்துக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையில்லையென்று உமக்கும் வேலையில்லையா?

சிவத்தமிழ் செல்வி அப்பாக்குட்டிதங்கம்மா பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு கேக்வேட்டினுல் உமக்கென்ன உமக்கும் தேவயா? கேக். அறிவில்லாத முட்டாளே.

இதை மட்டும் பத்திரிகையில் வெளியிடாதையும் விசர்முட்டாளே. வெளியிட்டால் நடக்கிறது வேறை.

எமது குறிப்பு:—

இக்கடிதம் கையெழுத்திடப்படவில்லை. என்வலப்பில் மயிலிட்டி கடற்கரை என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனுல் கடிதத்தில சுதுமலை வடக்கு பானிப்பாய் என்று எழுதப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் இக்கடிதம் ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையர் கோயில் குருக்கள் குகதாசரால் எழுதப்பட்டுள்ளதாக எமக்கு விளங்குகின்றது. அவர் எழுத்தைப்போன்றுதான் இக்கடித எழுத்தும் அமைந்திருக்கிறது. ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோயிலில் ஒலிபெருக்கியில் விளம்பரம்செய்த ஷ குருக்கள் சந்திரதீபத்தைப்பற்றியும் அதே ஒலிபெருக்கியில் அவதூறுகப் பேசுஞர். இவருக்கு ஆதரவாக இணுப்பாறிப கூட்டுறவுப் பரிசோதகர் சிவகுருநாதர் காரியதரிசி கைலாயபிள்ளையும் உள்ளனர். அடுத்து இவருக்காக வேண்டி எனக்கு உடற்தீங்கு செய்யப்போவதாக மாணிக்கம் கைம்பெண் பாக்கியம் என்பவர் பலரிடமும் சொலலிக்கொண்டார். சிவத்தமிழ்ச் செல்வியின் ஆதரவாளர் தெல்லிப்பழையில் வைத்து நமக்கு உடற்தீங்கு செய்ய முற்பட்டமை பற்றி எம் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தோம். ஆகவே சிவத்தமிழச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மெட்டேர்ண் குருக்கள் என அழைக்கப்படும் சுண்ணுகம் கதிரமலைச் சிவன் கோவில் சோமஸ்கந்தர் ஆன இவர்களுடைய செயல்களை யார் வரவேற்கின்றார்கள்? இவர்களுடைய சேவையை யார் விரும்புகின்றனர்? இவர்களுடைய சேவையால் எத்தகைய மக்கள உருவாக்கப்படுகின்றர் என்பதை சைவ மக்களுக்கு காண்பிக்கவே இக்கடிதத்தைப்பிரசுரிக்கிறேன். சிவத் தமிழ்ச் செல்வி மெட்டேர்ண் குருக்கள் ஆகியோரின் சேவையால் நாட்டில் விளையும் பயனைச் சைவ மக்கள் உணர்ந்து கொள்ளட்டும்.

காரைநகர் சிவன்கோவிலில் ஒருகோபுரம் கட்ட 13 வருடமாயும அது முடியாது அத்திவாரக்கல்லையும் அகற்றிவிட்டு இருக்கிறார்கள். ஆனல் இந்தியாவிலுள்ள சிதம்பரம் என்னும் தலம் நான்கு திக்கும் கோபுரத்துடன் சிறந்து விளங்குகின்றது.

எனவே கோபுரம் தாண்டு குப்பை மிதந்தால் ஈழத்திலுள்ள இவ்வாலயம் எப்படிச் சிதம்பரமாகும் என்று வினவப்படுகிறது.

கோபுரம் கட்டச் சேர்த்த காசில் தென்னிந்தியா சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குச் சென்று திரும்பிய ஏராளம் பணம் சேர்த்தவர். ஆனல் கோபுரம் கட்டுவதற்கு நாட்டப்பட்ட பனைமரங்கள் இன்றும் நிமிர்ந்து நின்று காட்சிதருகின்றன.

# பன்றிக்கோட்டுப் பிள்ளையார்கோவில்

## பரிபாலனசபையில் அங்கம்வகிப்போர் 39 பேர் அவற்றுள் 27 பேர் பெண்களாவர் இதன் மர்மம்தான் யாது?

யாழ்ப்பாணத்தில் என்றும் இல்லாதபடி ஒரு பரிபாலனசபை கூட்டப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலில் நடந்துள்ளது. பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் மகாசபையாக 39 பேர் சேர்க்கப்பட்டனர். இந்த 39 பேரில் 27 பேர் பெண்களாவர். இந்த ஆலயபரிபாலன சபைக்கு 12 பேர் தேவைப்படுகின்றனர். ஆகவே மகாசபையில் 12 ஆண்களே அங்கத்தவராக உள்ளனர். எனவே இந்தக் குறிப்பிட்ட 12 ஆண்களையும் பரிபாலனசபையில் நியமித்துக்கொள்வதற்காக 29 பெண்களைத் தங்களுக்குச் சார்பாகச் சேர்த்துக்கொண்டதாகச் சந்திரதீபத்திற்குச் செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோயில்பேரில் ஒன்றரை இலட்சரூபா பணமாகக் கோட்டில் உள்ளதாம். இந்தப் பணத்தை எடுத்து கோவில் பேரில் செலவழிப்பதாகச் சொல்லித் தங்கள் சொந்த நலனுக்காகப் பாவிப்பதற்குச் செட்டியார் குடும்பத்தைச் சேர்ந்த சிலரின் சூட்சியாகும் எனக் கருதப்படுகிறது. இந்தச் செட்டி குடும்பத்தைச் சேர்ந்த கல்லூரி அதிபராக இருந்த ஒருவர் நாவலர் அறநிலைய விற்பனையாலவந்த பணத்தில் தம் சொந்த நலனுக்குப் பாவித்த வரலாறும் உண்டாம்.

அடுத்து இந்த மகாசபையில் காரியதரிசியாக ருப்பவர் அரசாங்கம் பாடசாலைகளைச சுவீகரித்த நேரத்தில் நாவலர் பாடசாலையின் ஒரு பகுதியைச் சாக்குவியாபாரிக்கு சாக்கடுக்க மாதம் முந்நூறு ரூபா வாடகைக்குக் கொடுக்க எத்தனித்தவராம். இக்கோயிலில் உண்டியல உடைக்கப்பட்டதாம். அந்த உண்டியல் உடைத்ததையிட்டு அர்ச்சகரின் நிர்வாகத் தொடர்புபற்றியும கதைகள் பேசப்படுகின்றன. அடுத்து கணக்குப் பரிசோதனை இல்லாமலே பொதுக்கூட்டம் நடத்தமுற்பட்டனராம். பூசகர் கோயிலுக்குள் இருப்பதால் அங்கு பல அழுக்குச் செயலகள் நடத்த முட்பட்டனராம். இக்கோயில்பேரில் பல காணிகள் உண்டாம். 1925-ம் ஆண்டு கோயிலுக்கு எழுதப்பட்ட காணியை 1970-ம ஆண்டுதானும் அக்காணி கோயில் பேரில உண்டென்று பரிபாலனசபைத் தலைவருக்குத தெரியவந்ததாம். கோயில மதில் கட்டியதில் நாவாகசபை அங்கிகாரம இன்றி செலவிடப்பட்ட பணத்தில் 700/-ம் ரூபா இன்னும் வருமதியாக உள்ளது என்று செட்டியார் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் அச்சக உரிமையாளர் அப்பணத்தைத் தரும்படி நிர்வாக சபையிடம் கோரியுள்ளாராம்.

ஏராளமான ஆண்கள் இப்பகுதியில் இருந்தும ஆவர்களை மகா சபையில் சேர்த்துக் கொண்டால் செட்டிமார் குடும்பம் கோவில் சொத்துக்களை அனுபவிப்பதை விரும்பார்கள் என்ற அச்சத்தால் ஆண்களுக்குப் பதில பெண்களை அங்கத்தவர்கள் ஆகச் சேர்த்துக் கொண்டனராம்.

இந்தக் கோயில் பேரில் உள்ள காணிகள் யாவும சிலரின் பாவனைக்காக பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளதால் மேன்மை கொள் சைவ நீதி என்று வெளியால் பேசுவோர் இப்படியும் செய்யலாமோ என்று பலரும் கேட்கின்றனர்.

பன்றிக்கோட்டு ஆலய நிர்வாக சபையினர் இக்கருத்தை சிந்தையில் கொண்டு பலரின் நன்மதிப்பையும் பெறுவதற்காக கோயிலை சரியான முறையில் பரிபாலிப்பார்கள் எனக் கருத்து தெரிவிக்கிறோம்.

# கோயிற்களவுக்கும் சாத்திரமா?

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் சமீபத்தில் ஒரு களவு நடந்தது. அங்கே ஆறுமுக சுவாமியினுடைய வெள்ளி முடியும் கைவேலும் களவு போனதாம். மேற்கு கதவின் பூட்டை அரிந்து கள்ளர்கள் உட்சென்று இக்களவை எடுத்துச் சென்றுள்ளார்களாம். இதை அறிந்த நிர்வாகம் பொலிசுக்கு அறிவித்துள்ளதாம். இதில் சிறப்பு என்னவென்றுல் கோயிலில் களவெடுத்தவரை தேடிக் கண்டு பிடிக்க முடியாத நிலையில் தற்போது சாத்திரம் கேட்டுள்ளனராம். சாத்திரத்தில் அப்பொருட்கள் யாவும் திரும்பிவரும் என்று கூறப்பட்டுள்ளதாம. எப்பொழுது வருமெனத் தெரியாது. அடுத்து கோயிலில்நடந்தகளவிற்கு சாத்திரம் கேட்கவேண்டிய நிலமை ஏனென்று தெரியவில்லை. இக்கோயிலை நிர்வாகம் ஏனென்றுதெரியவில்லை வீடு யாதரிப்பாவிக்கின்றனர். இங்கே ஒரு பெரிய தனவந்தரின் மகளுக்கு திருமணம் நடந்தது. அன்று அக்கோயில மண்டபம், கோயிலைமுழுவதும் அத்தனவந்தரின் சொந்த இல்லமாக பாவிக்கப்பட்டது அத்தனவந்தர் தன் மகளின் திருமணம் காணவருவோர் வசதிக்காகவும் குசாலாகவும் இருந்து பார்ப்பதற்கு வெள்ளை மணல் தருவித்து பரப்பிவைத்தவர். இன்று அவ்வெள்ளை மணற்பரப்பிலே மத்தியானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்து சுருட்டும் புகைத்துக்கொண்டு உறங்குவதைக் காணலாம். சாயந்தரத்தல் பலர் கூடியிருந்து ஒரு வாசிகசாலை போல் பத்திரிகை வாசித்து பல கதையும் கதைப்பார்.

இக் கோயிலில் தான் முருகனையும் கிருவானந்த வாரியையும் தேர் மேல் ஏற்றி ஊர் மக்கள் தேர் இழுத்தனர். இக்களவு பற்றி வாரியார் சுவாமிக்கு தெரிவிக்கப் பட்டதோ எமக்குத் தெரியாது. கிட்டத்தட்ட இருபதாயிரம் ரூபா இங்கிருந்து சேமமாகத் தன் ஊருக்கு கொண்டு போன சுவாமி முருகனிடம் ஆனந்தத்தை வாரிக் கொண்டேன் என்றார். இக் களவு பற்றி ஏதும் முருகனிடம்வாரிக்கொண்டு சொல்வாரா யின் நாம் அவருக்கு நன்றி சொல்வோம். சாத்திரத்திற்கு எவ்வளவு காசு கொடுத்தனரோ தெரியாது. ஆனுல் இரு தாயிரம் வாரிக்கொண்டவாரியார முருகனிடம் இக்களவைப் பற்றிய துப்பை வாரிவழங்கினுல் நல்லது. சிவநாம வள்ளல்களென வாரியாரால் போற்றப்படும் பீடி சவுக்காரம் புகையிலை இறம்பு முதல்பெருமக்கள் அனைவரும் வாரியார் சாதுரம்பலித்தால் வாரியருக்குப் பூரிப்பான தேரொன்று கட்டியிழுப்பார்கள என நம்புகின்றோம.

# கோபுரம் தாழ்ந்ததாம் குப்பைமேடு மிதந்ததாம்

காரைநகர் சிவன்கோவிலில் கிட்டத்தட்ட 13 வருடங்கட்கு முன்பு கோபுரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அத்திவாரமும் போடப்பட்டது. ஆனுல் என்னவோ தெரியாது கோபுரம் ஆரம்பிக்கப் பணம் சேகரிக்கப்பட்டும கோபுரம் கட்டப்படவில்லை.

காரைநகரில் ஒருவழக்கம் அதாவது கணவன்மார் இறந்தால் தாலியை விற்பதில்லை. அதை ஒரு கோவிலுக்கே கொடுப்பது. இந்த வகையாகக் கோபுரம்கட்ட முயற்சிநடைபெறுவதை அறிந்த கைம்பெண்கள் பலர் ( 4 பேர் எனச் சொல்லப்படுகிறது) தமது தாலியைக் கோபுரம் கட்டுவதற்குப் பணம் சேர்த்தவரிடம் கொடுத்தனராம். அதையும் அவர் பெற்றுக்கொண்டு இப்போது தலைமறைவாகி உள்ளாராம். சிலர் காங்கேசன்துறை வீதியில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு நகைக்கடையில் இப்பணமும் தாலிகளும் வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுளளன எனவும் சொல்கின்றனர்.

இது இப்படியிருப்ப வேறு சில தனவந்தாகள் இக்கோபுரத்தினைக் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு துணிந்தபோது கருங்கல்லால் கட்டுவதோ செங்கல்லால் கட்டுவதோ என்ற பிரச்சனையில் தனவந்தர்களும் தங்கள் சொல்லை மற்றவர் ஏற்கிறார் இல்லை என்ற ஆத்திரத்தில் அந்த முயற்சியினைக் கைவிட்டனராம்,

ஒரு பழமொழி சொல்வார் "கோபுரம் தாண்டது குப்பை மிதந்தது" என்றதாக. இதை நினைக்கும்போது எமது முன்னைப் பெரியோரின் கூரிய அறிவுத்திறனை மெச்சவேண்டும்.

காரைநகர்சிவன்கோவிலில் வருடாவருடம் திருவாசகவிழா நடைபெறும். காரைநகர் மக்கள் செலவில் தென்னிந்திய பேச்சாளர் இங்குவந்து தம்மை அழைத்த விழாக்காரரையும் போற்றிப் புகழ்ந்து விழாவையும போற்றிப் புகழ்ந்து போவார்கள்.

இதுவன்றிக் காரைநகர் சிவன்கோவிலை 'ஈழத்துச் சிதம்பரம்' என்று சொல்வார்கள் [illegible] பாடப்பெற்றது. ஆனல் ஈழத்துச் சிதம்பரம் என்று பேரிடப்பட்ட

# அநாதைக்கொடியில் பணமோசடி?

கைதடி சைவ அநாதை இல்லத்தின்பேரில் கொடித்தினம் நடைபெற்று சைவ அநாதை இல்லத்தைச் சேர்ந்தோர் கொடிவிற்றுப் பணம் சேகரித்தனர்.

இவர்கள் பாடசாலை பாடசாலையாகப்போய் கொடிவிற்றனர். அப்பொழுது ஒருபாடசாலையில் கொடி விற்பனைசெய்திட அவ்வகுப்பில் எல்லோரும் கொடி வாங்கினர். ஒரு மாணவன்மட்டும் கொடி வாங்கவில்லை. ஏன் எனக் கேட்டபோது தன்னிடம் கொடி உண்டு எனககூறி இது ஒரு சில்லறை விடயம். இந்தப் பணம் சேகரிப்பாளரிடம் கொடி ரத்தியேகமாகப் பெறலாம். இப்படிப் பலர் கொடி விற்கிறார். விற்பனைசெய்யும் கொடிகளின் பணம் முழுவதும் கணக்குப் பண்ணப்படவில்லை ஏனெனில் அதன் காரியதரிசி இல்லப்பணத்தில் தன் சொந்தப் பாவிப்பிற்கும் எடுப்பதால் கொடிவிற்றதும் ஏனையோரைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கிறாராம். நக்குண்டார் நாவிழந்தார் என்பது உண்மையோ தெரியாது. இப்படியாகச் சில செய்திகள் கைதடி அநாதை இல்லத்தைப்பற்றி உள்ளன.

# சித்தன்கேணிப் பிள்ளையார்கோவில்

## உற்சவத்தின்போது ஒலிபெருக்கி அறவே நீக்கப்பட்டது

சித்தன்கேணிப் பிள்ளையார்கோவிலில் இம்முறை உற்சவத்தில் ஒலிபெருக்கிப் பாவனை அறவே நீக்கப்பட்டது. கோவிலில் கிரியாபாகங்கள் முன்னைய வேதநெறிப்படி நடந்தன. சைவ உலகில் வேதநீதி தவறாது பணிக்காத்திடத் திருவருள் சித்தன்கேணிப் பெருமக்கள் உள்ளத்தில் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணி உள்ளது. இது தமிழினம் உயரும் என்பதின் அறிகுறியாகும் என்பது தெரியவருகிறது.

---

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் வை. நல்லையா அவர்களால் சிவநெறிப் பாதுகாப்பின் பொருட்டு சந்திரதீப அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
வருட சந்தா ரூபா 25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org